தொகுதி 7, இதழ் 05

# நியூ இந்தியா சமாச்சார்

செப்டம்பர் 1-15, 2026
இலவச விநியோகத்திற்கு



80வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்

# தேசத்தின் தடையற்ற பயணத்தின் பிரகடனம்

சுதந்திரத்தின் நூற்றாண்டை எட்டும் காலத்திற்கான தொலைநோக்கை நனவாக்கும் வகையில், செங்கோட்டையின் கொத்தளத்திலிருந்து ஆற்றிய தனது 13-வது உரையில், வளர்ச்சிக்கான சப்ததாரா என்ற ஏழு வழிமுறைகளைக் கொண்ட செயல் திட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி முன்வைத்தார். மேலும், செமிகண்டக்டர்கள் முதல் பாதுகாப்புத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றம் வரை, அனைத்துத் துறைகளிலும் வடிவம் பெற்று வரும் தற்சார்பு இந்தியாவின் பொற்கால வளர்ச்சியையும் அவர் எடுத்துரைத்தார்.

# வாருங்கள், வளர்ச்சியடைந்த
# இந்தியாவை உருவாக்குவோம்



செங்கோட்டையில் நடைபெற்ற மறக்க முடியாத சுதந்திர தினம்! நமது சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த மகத்தான தலைவர்கள் மற்றும் வீரர்களின் துணிவையும் தியாகத்தையும் நினைவுகூரும் நாளாக இது அமைந்துள்ளது. ஒவ்வொரு சவாலையும் நாம் எதிர்கொண்டு வெற்றி பெறவும், ஒற்றுமையின் பிணைப்புகளை மேலும் வலுப்படுத்தவும், நாட்டிற்காக நம்மை அர்ப்பணிக்கவும் மூவண்ணக் கொடி நமக்கு உத்வேகம் அளிக்கிறது. காலம் நமக்கானது, வாய்ப்பு நமக்கானது, உறுதி நமக்கானது. வாருங்கள், நாம் அனைவரும் ஒன்றிணைந்து வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவோம்...

*செங்கோட்டையின் கொத்தளத்திலிருந்து பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையைக் காண, குறியீட்டுப் படத்தை ஸ்கேன் செய்யுங்கள்.*



NEW INDIA
SAMACHAR

VOLUME 7, ISSUE 05 | SEPTEMBER 01-15, 2026



EDITOR IN CHIEF
DHIRENDRA OJHA
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

CHIEF CONSULTING EDITOR
SANTOSH KUMAR

SENIOR ASST. CONSULTING EDITOR
PAWAN KUMAR

ASST. CONSULTING EDITORS
AKHILESH KUMAR
CHANDAN KUMAR CHOUDHARY

LANGUAGE EDITORS
SUMIT KUMAR (ENGLISH)
RAJNEESH MISHRA (ENGLISH)
NADEEM AHMED (URDU)

SENIOR DESIGNER
PHOOL CHAND TIWARI

DESIGNERS
ABHAY GUPTA
SATYAM SINGH




**CLICK TO READ**
**NEW INDIA SAMACHAR**
**AVAILABLE IN 13 LANGUAGES**
https://newindiasamachar.pib.gov.in/news.aspx

TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK
https://newindiasamachar.pib.gov.in.archive.aspx

**Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'**

# உள் பக்கங்களில்...

80வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்
அட்டைப்பக்கக் கட்டுரை

## 2047–க்கான உறுதி ஏழு வழிமுறைகளைக் கொண்ட செயல் திட்டம்

'தேசம் முதலில்' என்ற தாரக மந்திரத்தின் வழிகாட்டுதலுடன், கடந்த 12 ஆண்டுகளில் வளர்ச்சிக்கான புதிய அத்தியாயம் எழுதப்பட்டுள்ளது. 2047–ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் இலக்கிற்கான அடித்தளமாகவும் இது மாறியுள்ளது. இந்தப் பின்னணியில், இந்த ஆகஸ்ட் 15–ம் தேதி செங்கோட்டையின் கொத்தளத்திலிருந்து உரையாற்றிய பிரதமர் மோடி, 7 வழிமுறைகளைக் கொண்ட செயல் திட்டத்தை உருவாக்குவதற்கு அழைப்பு விடுத்தார். இதன் மூலம், அவரது 13–வது சுதந்திர தின உரை, தேசத்தின் இடைவிடாத பயணத்தைப் போற்றும் கொண்டாட்டமாக அமைந்தது... |10-29



**பிரிவினையின் கொடூரங்களை நினைவுகூரும்**

இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் அமைதியை நிலைநாட்டுவதற்கான உறுதியான தீர்மானம்

நாட்டின் பிரிவினையால் ஏற்பட்ட வேதனையையும், அதனால் மக்கள் எதிர்கொண்ட துயரங்களையும், தியாகங்களையும் நினைவுகூரும் வகையில், ஆகஸ்ட் 14–ம் தேதி அனுசரிக்கப்படும் 'பிரிவினையின் கொடூரங்களை நினைவுகூரும் நாள்', மனிதநேய உணர்வை மேலும் வலுப்படுத்துகிறது... |30-31





**ஒருங்கிணைந்த பணப்பரிவர்த்தனை சேவைகள் தொடர்ந்து இலவசமாக...**

பொதுப் பயன்பாட்டாளர்களுக்கான பணப்பரிவர்த்தனைகளுக்கும், ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குச் செய்யப்படும் பணப்பரிவர்த்தனை களுக்கும் ஒருங்கிணைந்த பணப்பரிவர்த்தனை சேவைகள் தொடர்ந்து முற்றிலும் இலவசமாக இருக்கும். டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளுக்கான வணிகர் தள்ளுபடி விகிதம் என்பது வாடிக்கையாளர்களுக்கானது அல்ல; அது வணிகர்களுக்கே பொருந்தும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் vதெளிவுபடுத்தியுள்ளார். |38


**செய்தி சுருக்கங்கள்** |4-5

**ஆளுமை: ஆஷா போஸ்லே**
தனது வசீகரிக்கும் குரலால் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களை வென்றவர் |6

**சாதகமான சூழல் ஏற்படுத்திய தொழில் புரட்சிக்கான புதிய பயணம்**
பிரதமர் மோடி ஆந்திரப் பிரதேசத்திற்கு வளர்ச்சித் திட்டங்களை வழங்கினார் |32-34

**குவாஹாத்தி–தேஸ்பூர் நெடுஞ்சாலை மற்றும் கோபர்தன் திட்டத்திற்கு ஒப்புதல்...**
மத்திய அமைச்சரவையின் முடிவுகள் |35

**ஒவ்வொரு முடிவுக்கும் அடித்தளமாக 'இளைஞர்கள்'**
பிரதமர் மோடி ஐஐடி தில்லி பட்டமளிப்பு விழாவில் உரையாற்றினார் |36-37

**வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கு உடல் மற்றும் மனநலம் அவசியம்**
வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான போதைப்பொருள் இல்லாத இளைஞர் உறுதிப்பாட்டு இயக்கம் தொடக்கம்... |39

**எதிர்காலத் தலைமுறையினருக்கு ஊக்கமளிக்கும் தாரக மந்திரம்**
பிரதமர் மோடி காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்களுடன் கலந்துரையாடினார் |40-41

**இந்திய ஜனநாயகத்துக்கும் சமூகத்துக்கும் ஒரு மரபுச் செல்வம்**
முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் சுயசரிதை வெளியீடு |42


**சுதந்திர தினத்தை முன்னிட்டு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு ஆற்றிய**



**வளர்ச்சியடைந்த இந்தியா...**
வளர்ச்சியும் நலனும் தான் உண்மையான இலக்குகள்

நாட்டின் 80–வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, அரசியலமைப்புச் சட்டத்தின் மதிப்புகளை நிலைநாட்டவும், தங்களது அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றவும் பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தார்... |7-9


**Published:** Kanchan Prasad, Director General, on behalf of Central Bureau of Communication
**Communication Address :** Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003.
**E-Mail : response-nis@pib.gov.in, RNI No. :** DELENG/2020/78811

# ஆசிரியர் மேசையிலிருந்து...

## செங்கோட்டையிலிருந்து பிரதமர் மோடியின் அழைப்பு

# ஏழு வழிமுறைகளைக் கொண்ட செயல் திட்டம் மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியா மீது கவனம்; இளைஞர்களுக்கு இலவசப் பயிற்சி

**வந்தே மாதரம்!**

செங்கோட்டையின் கொத்தளத்திலிருந்து பிரதமர் நரேந்திர மோடி ஆற்றிய 13–வது உரை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தருணமாக அமைந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு முதல்முறையாக, செங்கோட்டையில் 'வந்தே மாதரம்' என்ற முழக்கம் எதிரொலித்தது. 2047–ம் ஆண்டுக்குள் இந்தியா ஒரு வளர்ச்சியடைந்த நாடாக மாறுவது உறுதி என்று பிரதமர் தெளிவாகத் தெரிவித்தார். இந்த இலக்கை அடைவதற்காக, உற்பத்தித் துறை, டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள் மற்றும் நவீன உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் நாடு ஏற்கெனவே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. முதல் ஹைட்ரஜன் எரிசக்தியில் இயங்கும் ரயில் தொடங்கப்பட்டது மற்றும் அணுசக்தித் துறையில் தற்சார்பை நோக்கி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை இந்த முன்னேற்றத்திற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

இந்த உரையின் மையச் செய்தியாக 'ஏழு வழிமுறைகளைக் கொண்ட செயல் திட்டம்' என்ற அழைப்பு அமைந்தது. நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஏழு முக்கியத் தூண்களை அவர் எடுத்துரைத்தார். அவை: உற்பத்தித் திறன், வேளாண்மை மற்றும் உணவு உற்பத்தி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம், விரைவான உள்கட்டமைப்பு வளர்ச்சி, பாதுகாப்புத் திறன், பசுமைப் பொருளாதாரம் மற்றும் நீலப் பொருளாதாரம், மேலும் இந்தியாவின் மென் சக்தி (கலாச்சார மற்றும் பாரம்பரியம் சார்ந்த விழுமியங்கள்) ஆகியவையாகும். இந்த ஏழு சக்திகளும் ஒன்றிணைந்து வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் உறுதிப்பாட்டை மேலும் விரைவுப்படுத்தும்.

இந்தப் பயணத்தின் இயக்க சக்தியாக இளைஞர்களைச் சுட்டிக்காட்டிய பிரதமர், வரும் ஆண்டில் ஒரு கோடி இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவுத் திறன்களில் பயிற்சி அளிப்பதை இலக்காக நிர்ணயித்தார். பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவச இணையவழிப் பயிற்சியை வழங்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். 2030–ம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை இந்தியா நடத்துவது, விளையாட்டுத் துறையில் நாடு வளர்ந்து வரும் உயர்நிலைக்கும், இந்திய இளைஞர்களின் அளவற்ற திறனுக்கும் ஒரு சான்றாக அமைந்துள்ளது. போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்காக 100 வார கால சிறப்பு இயக்கம், இந்தியாவில் நக்சல்வாதத்தின் கருத்தியல் வேர்களைத் தனிமைப்படுத்துவதற்கான உத்தி, வலுவான மக்கள் பாதுகாப்புக் கட்டமைப்பை உருவாக்கும் தொலைநோக்கு ஆகிய அனைத்தும் பாதுகாப்பான மற்றும் ஒழுக்கமான சமூகத்திற்கான அடித்தளத்தை அமைக்கும். மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இது பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் அரசின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது துல்லியமான தகவல்களை வழங்க வேண்டும் என்ற அழைப்பும், பஞ்ச பிராண் என்ற ஐந்து உறுதிமொழிகளை மீண்டும் வலியுறுத்தியதும், பொதுமக்களிடையே தங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியது.

ஒட்டுமொத்தமாக, இந்த உரை உறுதி, அர்ப்பணிப்பு மற்றும் அனைவரின் கூட்டு முயற்சிக்கான அழைப்பாக அமைந்துள்ளது. இதுவே இந்த இதழின் அட்டைப்பக்கக் கட்டுரையாக இடம்பெற்றுள்ளது. மேலும், இந்த இதழின் ஆளுமைப் பகுதியில், தனது குரலால் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களைக் கவர்ந்த ஆஷா போஸ்லே பற்றிப் படிக்கலாம். பிரதமர் நரேந்திர மோடி கடந்த இரு வாரங்களில் பங்கேற்ற முக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் மத்திய அமைச்சரவையின் முக்கிய முடிவுகளையும் அறிந்துகொள்ளலாம். உள்ளே வரும் பக்கங்களில், சுதந்திர தினத்தன்று உற்சாகத்துடன் திரண்டிருந்த பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் செங்கோட்டையின் கொத்தளத்தில் காணப்பட்ட மெய்சிலிர்க்கும் காட்சிகளையும் வாசகர்கள் காணலாம். பின்பக்க அட்டையில், யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளமாகத் திகழும் 'சாரநாத்தின் பண்டைய புத்த தலத்தை' பற்றிய சிறப்புக் கட்டுரை இடம்பெற்றுள்ளது.

**தொடர்ந்து உங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

(Dhirendra Ojha)

இந்தி, ஆங்கிலம் உள்பட 11 மொழிகளில் இதழைப் படிக்க இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

https://newindiasamachar.pib.gov.in/

# மின்னஞ்சல் பெட்டி






## தகவல் நிறைந்த, நம்பகமான, பயனுள்ள இதழ்

நியு இந்தியா சமாச்சார் ஒரு தகவல் நிறைந்த, நம்பகமான மற்றும் பயனுள்ள இதழாக உள்ளது. மத்திய அரசுப் பணியாளர் தேர்வுக்கான எனது தயாரிப்பில் இந்த இதழ் பெரிதும் உதவியாக உள்ளது. குறிப்பாக, பல்வேறு அரசுத் திட்டங்களைப் புரிந்துகொள்வதற்கும், அவற்றைப் பற்றிய சமநிலையான பார்வையை வளர்த்துக் கொள்வதற்கும் இந்த இதழ் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. 'நியு இந்தியா சமாச்சார்' இதழுக்குப் பின்னால் பணியாற்றி வரும் ஒட்டுமொத்த குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பிரின்ஸ் குமார் சிங்**
ps0488034@gmail.com

## தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு நம்பகமான தகவல்கள்

நியு இந்தியா சமாச்சார் இதழில் வெளியிடப்படும் கட்டுரைகள் எளிய மொழியில் பயனுள்ள தகவல்களை வழங்குகின்றன. இந்தியாவின் வளர்ச்சியின் பல்வேறு அம்சங்களைப் புரிந்துகொள்ள இந்த இதழ் உதவுகிறது. இது தகவல் நிறைந்ததாகவும், எளிதில் படித்துப் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் உள்ளது. மேலும், அரசுப் பணித் தேர்வு மற்றும் பிற போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு, 'நியு இந்தியா சமாச்சார்' நம்பகமான மற்றும் உண்மையான தகவல்களின் மதிப்புமிக்க ஆதாரமாக விளங்குகிறது. ஒட்டுமொத்தமாக, இந்த இதழ் நாட்டின் முன்னேற்றம் குறித்த தகவல்களை வாசகர்களுக்குத் தொடர்ந்து வழங்குவதுடன் மட்டுமல்லாமல், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் ஒவ்வொரு குடிமகனும் பங்களிக்க வேண்டும் என்ற உணர்வையும் ஊக்குவிக்கிறது.

ashishprabhatmishra@gmail.com

## புகைப்படங்கள் மற்றும் உண்மைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட சிறப்பான இதழ், எளிதில் புரிந்துகொள்ள உதவுகிறது

2026 ஆகஸ்ட் 1 முதல் 15-ம் தேதி வரையிலான நியு இந்தியா சமாச்சார் இதழ் எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. குறிப்பாக, அட்டைப்பக்கக் கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. அந்தக் கட்டுரை தகவல் நிறைந்ததாகவும், ஊக்கமளிப்பதாகவும், சிறப்பான முறையில் வழங்கப்பட்டதாகவும் உள்ளது. உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம், கல்வி, சுகாதாரம், வேளாண்மை மற்றும் சமூக நலன் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தை இந்தக் கட்டுரை சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. அதே வேளையில், 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற தொலைநோக்குப் பார்வையையும் மேலும் வலுப்படுத்துகிறது. புகைப்படங்கள் மற்றும் உண்மைத் தகவல்களுடன் இந்தக் கட்டுரை வழங்கப்பட்டுள்ள விதம், அதை ஆர்வத்துடன் படிக்கவும் எளிதாகப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது.

**வடவள்ளி ஸ்ரீதர்**
vsdhar121@gmail.com

## அரசின் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடப்பு நிகழ்வுகள் குறித்த சிறந்த தகவல்கள்

நான் நியு இந்தியா சமாச்சார் இதழின் வாசகர். இந்த இதழ் மிகவும் தகவல் நிறைந்ததாக இருப்பதை நான் உணர்கிறேன். குறிப்பாக, இந்திய அரசின் பல்வேறு திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடப்பு நிகழ்வுகள் குறித்த சிறந்த தகவல்களை இந்த இதழ் வழங்குகிறது.

**ஹர்ஷத் மக்வானா**
harshmak161184@gmail.com

## அறிவு மற்றும் திறன் வளர்ச்சிக்கு உதவுகிறது

நான் நியு இந்தியா சமாச்சார் இதழைத் தொடர்ந்து படித்து வருகிறேன். இது தகவல் நிறைந்ததாகவும், அரசின் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான தகவல்களை வழங்குவதாகவும் உள்ளது. இது எனது தனிப்பட்ட முன்னேற்றத்திற்கும், எனது அறிவு மற்றும் திறன் வளர்ச்சிக்கும் உதவுகிறது. இந்த இதழைப் படிப்பதையும், அதன் மூலம் பல்வேறு தகவல்களைக் கற்றுக்கொள்வதையும் நான் மிகவும் விரும்புகிறேன்.

**பாஸ்கர் சிங் மகார்**
bhaskarmahar65@gmail.com

Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003

E-Mail: response-nis@pib.gov.in

# செய்திச் சுருக்கம்

## அரசு அலுவலகங்களுக்குச் செல்வது, நீண்ட வரிசையில் காத்திருப்பது போன்ற சிரமங்கள் இனி இல்லை




### உமாங் செயலியில் 2,575 சேவைகள்; டிஜிலாக்கரில் 72 கோடி பயனர்கள்

மத்திய அரசின் 'டிஜிட்டல் இந்தியா' திட்டம் மற்றும் டிஜிட்டல் சேவைகளின் விரிவாக்கம் காரணமாக, பொதுமக்கள் இனி மீண்டும் மீண்டும் அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. தற்போது எண்மச் சேவைகளை வீட்டில் இருந்தபடியே எளிதாகப் பெற முடிகிறது. ஆதார், உமாங், டிஜிலாக்கர், பொது சேவை மையங்கள் மற்றும் இ–சஞ்சீவனி போன்ற சேவைகளை மக்கள் மிகவும் எளிதாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

மாநிலங்களவையில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வழங்கிய தகவலின்படி, நாட்டில் இணையச் சேவைப் பயனாளர்களின் எண்ணிக்கை 109 கோடியைத் தாண்டியுள்ளது. அதேபோல், 144 கோடிக்கும் அதிகமான ஆதார் எண்கள் உருவாக்கப்பட்டுள்ளன. டிஜிலாக்கர் தளத்தில் 71.66 கோடிக்கும் அதிகமான பதிவு செய்த பயனர்கள் உள்ளனர். மேலும், பதிவு செய்யப்பட்ட 2,822 ஆவண வழங்குநர்கள் மூலம் 936.03 கோடிக்கும் அதிகமான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன. புதிய தலைமுறை நிர்வாகத்திற்கான ஒருங்கிணைந்த கைப்பேசி செயலியான உமாங் செயலி மூலம், தற்போது பொதுமக்களுக்கு 2,575 அரசுச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## பிரதமரின் சூரிய வீடு இலவச மின்சாரத் திட்டம்

### 51 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்தன; 28.4 லட்சம் வேளாண் மின் பம்புகள் சூரிய மின்சக்திக்கு மாற்றப்பட்டன

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிப்பதற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, 'பிரதமரின் சூரிய வீடு இலவச மின்சாரத் திட்டம்' 2024 பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம், ஆகஸ்ட் 10–ம் தேதி நிலவரப்படி 51.27 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ், 41.76 லட்சம் வீடுகளின் மேற்கூரைகளில் சூரிய மின்சக்தி அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்களுக்கு ரூ.28,000 கோடிக்கும் அதிகமான மானியம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கோடி வீடுகளின் மேற்கூரைகளில் சூரிய மின்சக்தி அமைப்புகளை நிறுவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக ரூ.75,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நாட்டில் சூரிய மின்சக்தியை ஊக்குவிக்கும் 'பிரதமரின் விவசாயிகளுக்கான சூரிய மின்சக்தித் திட்டத்தின்' கீழ், 2026 ஜூலை 31 நிலவரப்படி 28.4 லட்சம் பாசன மின் பம்புகளை சூரிய மின்சக்திக்கு மாற்றும் பணி நிறைவடைந்துள்ளது.



## அருணாச்சலப் பிரதேசத்தின் 'கிளாவ் ஏரி': இந்தியாவின் 101வது ராம்சார் தளம்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றில் மத்திய அரசு கொண்டுள்ள உறுதியான அர்ப்பணிப்பின் விளைவாக, அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள கிளாவ் ஏரி, அந்த மாநிலத்தின் முதல் ராம்சார் தளமாகவும், இந்தியாவின் 101–வது ராம்சார் தளமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2014–ம் ஆண்டில் நாட்டில் வெறும் 26 ராம்சார் தளங்கள் மட்டுமே இருந்த நிலையில், கடந்த 12 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 101 ஆக உயர்ந்துள்ளது. கம்லாங் புலிகள் காப்பகம் மற்றும் வனவிலங்கு சரணாலயத்திற்குள் அமைந்துள்ள கிளாவ் ஏரி, கிழக்கு இமயமலையில் இயற்கை எழில் மாறாமல் காணப்படும் தூய்மையான நன்னீர் ஏரியாகும். இது பல்லுயிர்களின் முக்கிய வாழ்விடமாகவும் திகழ்கிறது. ஆண்டு முழுவதும் பாயும் மலைநீரோடைகளால் இந்த ஏரி தண்ணீரைப் பெறுகிறது. அடர்ந்த தாவரங்களால் சூழப்பட்டுள்ள இந்த நீர்நிலைப் பகுதி, 150–க்கும் மேற்பட்ட மர வகைகளுக்கும், 49 வகையான ஆர்க்கிட் மலர்களுக்கும் வாழ்விடமாக உள்ளது.





**இணையவழிக் குற்றங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை**

## 3,700க்கும் மேற்பட்ட தவறான மற்றும் மோசடியான செயலிகளை அரசு முடக்கியது

பொதுமக்களின் வசதிக்காக இந்திய இணையவழிக் குற்றத் தடுப்பு ஒருங்கிணைப்பு மையம், தேசிய இணையவழிக் குற்றப் புகார் இணையதளத்தைத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் இணையவழிக் குற்றங்கள் குறித்து புகார் அளிக்க முடியும். மேலும், 2000–ம் ஆண்டின் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, போலியான கடன் வழங்கும் செயலிகள் உள்ளிட்ட மொத்தம் 3,718 மோசடியான கைப்பேசி செயலிகள் முடக்கப்பட்டுள்ளன. மக்களவையில் வழங்கப்பட்ட தகவலின்படி, நிதி மோசடிகள் குறித்து உடனடியாக புகார் அளிப்பதற்கும், மோசடி மூலம் பணம் இழப்பதைத் தடுக்கவும் 'குடிமக்கள் நிதி இணையவழி மோசடி புகார் மற்றும் மேலாண்மை அமைப்பு' 2021–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த அமைப்பின் மூலம், 2026 ஜூன் 30–ம் தேதி வரை 32.80 லட்சத்துக்கும் அதிகமான புகார்களின் அடிப்படையில் ரூ.11,158 கோடிக்கும் அதிகமான பணம் பாதுகாக்கப்பட்டுள்ளது. 2026 ஜூன் 30–ம் தேதி நிலவரப்படி, அரசு 15.75 லட்சத்துக்கும் அதிகமான கைப்பேசி சிம்களையும், 5.77 லட்சம் கைப்பேசி சாதனங்களின் அடையாள எண்களையும் முடக்கியுள்ளது.







## புவிசார் குறியீடு பெற்ற மிதிலா மக்கானா ஆஸ்திரேலியாவை சென்றடைந்தது

புவிசார் குறியீடு பெற்ற மிதிலா மக்கானாவின் முதல் வணிக ஏற்றுமதியில், பீகார் மாநிலம் தர்பங்கா மாவட்டத்தில் உள்ள விவசாயிகளிடமிருந்து 18 மெட்ரிக் டன் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு, கடல் வழியாக ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த ஏற்றுமதி மூலம், விவசாயிகள் அப்போதைய சந்தை விலையைவிட சுமார் 18 சதவீதம் கூடுதல் வருமானம் பெற முடிந்துள்ளது. தர்பங்காவைச் சேர்ந்த மக்கானா விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட இந்த ஏற்றுமதி, பீகாரின் முக்கிய புவிசார் குறியீடு பெற்ற இந்தப் பொருளின் சர்வதேச சந்தை இருப்பை மேலும் வலுப்படுத்துவதுடன், விவசாயிகளுக்கு சிறந்த வருமான வாய்ப்புகளையும் உருவாக்கும். இந்தியாவின் மொத்த மக்கானா உற்பத்தியில் பீகார் மாநிலம் சுமார் 85 சதவீதப் பங்களிப்பைக் கொண்டுள்ளது. இந்தத் துறையை மேலும் வலுப்படுத்தும் வகையில், மக்கானாவுக்கென தனி வகைப்பாட்டுக் குறியீடு 2025 ஜூலை மாதம் முதல் நடைமுறைக்கு வந்தது. 2025–26–ம் நிதியாண்டில், இந்தியா 7,000 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான மக்கானாவையும், மதிப்புக் கூட்டப்பட்ட மக்கானா பொருட்களையும் அமெரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா உள்ளிட்ட 20–க்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.



## சண்டிகர் மற்றும் தாத்ரா – நகர் ஹவேலியில் மின்னணு ரூபாய் அடிப்படையிலான நேரடி நிதிப் பரிமாற்றம் தொடக்கம்

பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியங்கள், இனி சண்டிகர் மற்றும் தாத்ரா – நகர் ஹவேலி ஆகிய யூனியன் பிரதேசங்களில் மின்னணு ரூபாய் அடிப்படையிலான மின்னணு பரிசுச்சீட்டு வடிவில் வழங்கப்படும். மின்னணு ரூபாய் பரிசுச்சீட்டு என்பது குறிப்பிட்ட ஒரு நபருக்கும், குறிப்பிட்ட பயன்பாட்டுக்கும் உரிய எண்மப் பரிசுச்சீட்டாகும். பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டத்தின் பயனாளிகளுக்கு இந்த மானியத் தொகை நேரடியாக அவர்களின் எண்ம ரூபாய் கணக்குகளில் செலுத்தப்படும். இந்த நிதியைப் பட்டியலிடப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து உணவு தானியங்களை வாங்குவதற்கு மட்டுமே பயன்படுத்த முடியும். இந்த அமைப்பு பணப் பரிவர்த்தனைகளையும், இடைத்தரகர்களின் பங்கையும் குறைக்கும். அதேவேளையில், மானியங்கள் வழங்குவதில் முறைகேடுகள் நடைபெறுவதற்கான வாய்ப்பையும் குறைக்கும். மேலும், பரிவர்த்தனைகளை அரசு நிகழ்நேரத்தில் கண்காணிக்கவும் முடியும். இந்த அமைப்பு ஏற்கெனவே குஜராத் மற்றும் புதுச்சேரியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.





# வசீகரிக்கும் குரலால் கோடிக்கணக்கான இதயங்களை வென்றவர்

ஆஷா போஸ்லே தனது இனிமையான குரல் மற்றும் அபாரமான திறமையின் மூலம் இந்திய இசையை மேலும் வளப்படுத்தினார். இசையின் ஒவ்வொரு வகைக்கும் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் அவரது தனித்துவமான திறமை, கோடிக்கணக்கான மக்களின் இதயங்களை வென்றது. இந்தி, மராத்தி, வங்காளம், தமிழ், குஜராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளிலும், நாட்டுப்புற இசைத் துறையிலும் அவர் அழியாத தடத்தைப் பதித்தார். அவருக்கு ஈடுஇணையற்ற குரலும், வளமான இசைப் பாரம்பரியமும் இருந்தன. அவை தொடர்ந்து மக்களின் இதயங்களில் எதிரொலித்துக் கொண்டிருக்கும். அவரது கலைத்திறன் வருங்காலத் தலைமுறையினருக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும்.





பிறப்பு: 8 செப்டம்பர் 1933 | மறைவு: 12 ஏப்ரல் 2026

1933 செப்டம்பர் 8–ம் தேதி மகாராஷ்டிராவின் சாங்லி மாவட்டத்தில் ஒரு மராத்தியக் குடும்பத்தில் பிறந்த ஆஷா போஸ்லேவின் குரலில் இசைக் குறிப்புகள் மட்டுமல்ல, உணர்வுகளின் உயிரோட்டமான வெளிப்பாடும் நிறைந்திருந்தது. காதலின் இனிமை, பிரிவின் வலி, மகிழ்ச்சியின் பேரானந்தம், துயரத்தின் ஆழம் என அனைத்தையும் அவரது குரல் வெளிப்படுத்தியது. அவரது பாடல்கள் பல தலைமுறையினருக்கு வெறுமனே இசையைக் கேட்கக் கற்றுத்தரவில்லை; அந்த உணர்வுகளை உணரவும் கற்றுக்கொடுத்தன. அவரது தந்தை இசைக்கலைஞர் தீனாநாத் மங்கேஷ்கர். அவரது மூத்த சகோதரி புகழ்பெற்ற பாடகியும் பாரத ரத்னா விருது பெற்றவருமான லதா மங்கேஷ்கர் ஆவார். இத்தகைய இசைக் குடும்பத்தில் பிறந்ததால், சிறு வயதிலேயே ஆஷா போஸ்லே இசையுடன் ஆழமான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். 1943–ம் ஆண்டு தனது 10–வது வயதில் பாடத் தொடங்கிய அவர், 90 வயது வரை தொடர்ந்து பாடி வந்தார். ஒரு கலைஞராக மட்டுமல்லாமல், தனிப்பட்ட வாழ்க்கையிலும் தனது சொந்த விருப்பங்களுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்ப வாழ்க்கையை வாழ்ந்தார்.

பாப் இசை முதல் கஜல் வரையிலும், டிஸ்கோ முதல் பாரம்பரிய இசை வரையிலும், ஆஷா போஸ்லே தனது குரலால் தொடாத இசை வகையே இல்லை. 80 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த தனது இசைப் பயணத்தில், இந்தியாவின் பல்வேறு மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்களுக்கு தனது இனிமையான குரலை வழங்கினார். இதன் மூலம் இந்திய இசை உலகில் அழியாத தடத்தைப் பதித்தார். அவர் 12,000–க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியதாகக் கூறப்படுகிறது. இசைத்துறைக்கு அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பைப் பாராட்டி, பத்ம விபூஷண், தாதாசாகேப் பால்கே விருது, தேசிய திரைப்பட விருது உள்ளிட்ட பல்வேறு உயரிய விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டன. இதுதவிர, ஏராளமான தேசிய மற்றும் சர்வதேச விருதுகளையும் அவர் பெற்றுள்ளார். நீண்ட காலமாக, இந்தியக் கலை உலகை மேலும் வளப்படுத்துவதில் அவர் தனித்துவமான பங்களிப்பைச் செய்தார். அவரது குரலில் காணப்பட்ட மென்மையைப் போலவே, அவரது அணுகுமுறையிலும் எளிமையும் அன்பும் நிறைந்திருந்தன. மேலும், பல்வேறு மொழிகளில் பாடியதன் மூலம், இந்திய இசையையும் திரைப்படத் துறையையும் உலக அரங்கில் பெருமைக்குரிய நிலைக்கு அவர் உயர்த்தினார்.

2026 ஏப்ரல் 12–ம் தேதி, தனது 92–வது வயதில் அவர் மறைந்தார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி கூறியதாவது: "இந்தியாவின் மிகச் சிறந்த மற்றும் பன்முகத் திறமை கொண்ட குரல்களில் ஒருவரான ஆஷா போஸ்லே அவர்கள் மறைந்த செய்தி என்னை மிகவும் வேதனையடையச் செய்துள்ளது. பல தசாப்தங்களாக நீடித்த அவரது அசாதாரணமான இசைப் பயணம், நமது கலாச்சாரப் பாரம்பரியத்தை வளப்படுத்தியதுடன், உலகம் முழுவதும் எண்ணற்ற மக்களின் இதயங்களையும் தொட்டது. உணர்வுபூர்வமான இனிமையான பாடல்களாக இருந்தாலும், உற்சாகம் நிறைந்த இசை அமைப்புகளாக இருந்தாலும், அவரது குரலில் காலத்தால் அழியாத ஒலி இருந்தது. அவருடன் நான் மேற்கொண்ட சந்திப்புகளின் நினைவுகளை எப்போதும் போற்றிப் பாதுகாப்பேன். அவரது குடும்பத்தினர், ரசிகர்கள் மற்றும் இசை ஆர்வலர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் தொடர்ந்து பல தலைமுறையினருக்கு ஊக்கமளிப்பார். அவரது பாடல்கள் என்றென்றும் மக்களின் வாழ்க்கையில் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்."




சுதந்திர தினத்தை முன்னிட்டு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை

# வளர்ச்சியடைந்த இந்தியா...

## வளர்ச்சியும் நலனும் தான் உண்மையான இலக்குகள்

*நாட்டின் 80–வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, நாட்டைக் கட்டியெழுப்புவதில் ஒவ்வொரு குடிமகனும் பங்கேற்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்திய அவர், 2047–ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் இலக்குடன் நாடு முன்னேறி வருகிறது என்று குறிப்பிட்டார். இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள், விஞ்ஞானிகள், தொழிலாளர்கள், விளையாட்டு வீரர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் சமூகத்தின் பல்வேறு பிரிவினர், நாட்டின் வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பங்களிப்புகளைப் பாராட்டிய குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டத்தின் மதிப்புகளை நிலைநாட்டவும், தங்களது அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றவும் நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.*

### சுதந்திரத்தின் உண்மையான பொருள்

சுதந்திர இந்தியாவின் எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகளாக நாட்டு மக்கள் அனைவரும் திகழ வேண்டும். 'இந்திய மக்களாகிய நாம்' நமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, நமது கனவுகளை நனவாக்குவதுடன், இந்தியாவை உலகின் தலைசிறந்த நாடாக மாற்றும் உணர்வுடன் செயல்படுவதே சுதந்திரத்தின் உண்மையான பொருளாகும்.

### வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குதல்

நமது சுதந்திரத்தின் நூற்றாண்டான 2047–ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நோக்கில் நாம் முன்னேறி வருகிறோம். அந்த்யோதயா என்ற கொள்கையின் வழிகாட்டுதலுடன், வளர்ச்சியின் பலன்கள் ஒவ்வொரு தனிநபரையும் சென்றடைவதைவதில் நாம் உறுதியுடன் உள்ளோம். நமது வளமான பாரம்பரியத்தையும், சுதந்திரப் போராட்டத்தின் உயரிய லட்சியங்களையும் போற்றியபடி, நவீன வளர்ச்சிக்கான பாதையில் நாம் முன்னேறி வருகிறோம். 'வயம் ராஷ்ட்ரே ஜாக்ரியாம்' என்ற வேத வாக்கியம், நாம் எப்போதும் நாட்டின் நலனில் விழிப்புடனும் அர்ப்பணிப்புடனும் இருக்க வேண்டும் என்ற உணர்வை நமக்கு அளிக்கிறது.

### சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை

சுதந்திரப் போராட்டத்தில் பல்வேறு கொள்கைகளைக் கொண்டவர்கள் பங்கேற்றிருந்தாலும், அவர்கள் அனைவருக்கும் ஒரே இலக்குதான் இருந்தது: இந்தியாவின் சுதந்திரம். 'சுதேசி இயக்கத்தின்' போது, 'வந்தே மாதரம்' மக்களின் எழுச்சிப் பாடலாக மாறியது. தேசத் தந்தை மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ், எண்ணற்ற மக்கள் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றனர். பாபாசாகேப் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர், சமூகச் சீர்திருத்தத்திற்கும் நாட்டின் மீது கொண்ட அர்ப்பணிப்பிற்கும் உயரிய முன்னுதாரணங்களை நிலைநாட்டினார். நமது நாட்டை சுதந்திரம் மற்றும் முன்னேற்றத்தின் பாதையில் வழிநடத்திய அந்த மகத்தான பாரதத் தாயின் பிள்ளைகள் அனைவருக்கும் நான் மரியாதையுடன் தலைவணங்குகிறேன்.

### பிரிவினையின் கொடூரங்களை நினைவுகூரும் நாள்

ஆகஸ்ட் 14–ம் தேதியை 'பிரிவினையின் கொடூரங்களை

நினைவுகூரும் நாளாக' நாம் அனுசரிக்கிறோம். பிரிவினையின்போதான வன்முறையில் உயிரிழந்த நமது நாட்டைச் சேர்ந்த கோடிக்கணக்கான மக்களை நாம் நினைவுகூருகிறோம்.

நாட்டின் பிரிவினையின்போதோ, கட்டாய இடப் பெயர்வு என்ற மோசமான நிலையை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தின்போதோ.... வகுப்புவாத வன்முறைக் காரணமாக கோடிக்கணக்கான மக்கள் அகதிகளாக மாற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டதுடன், பிரிவினையின் கொடுமைகளை அனுபவிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இருப்பினும், அவர்கள் தங்கள் அடையாளத்தை ஒருபோதும் கைவிடவில்லை.

### ஒரு ஊக்கமளிக்கும் சாதனை

'இந்திய மக்களால்' உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு, மக்களின் பங்கேற்பு என்ற அடித்தளத்தின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. ஜனநாயகத்தின் அன்னையாகத் திகழும் நம் நாட்டு மக்களிடம், பங்களிப்பு உணர்வு எப்போதும் இயல்பாகவே இருந்து வருகிறது. நமது மக்கள், இந்த உணர்வை இப்போது புதிய உற்சாகத்துடன் முன்னெடுத்து வருகின்றனர். தேசிய அளவிலான இயக்கங்கள், பொதுமக்களின் தீவிரப் பங்கேற்புடன் செயல்படுத்தப்படுகின்றன.

### பெண்களின் பொருளாதார ரீதியிலான தன்னிறைவு

கல்வித்துறையில் நமது மகள்கள் மிகச் சிறப்பாக செயல்படுகிறார்கள். அதேவேளையில், வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்த உதவும் 'ட்ரோன் சகோதரிகள்' திட்டம் முதல் விமானப்படையில் போர் விமானங்களின் விமானிகளாகப் பணியாற்றுவது வரை, பல்வேறு துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருகிறது. சமீபத்தில் கிளாஸ்கோவில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், இந்தியா மொத்தம் வென்ற 13 தங்கப் பதக்கங்களில் 8-ஐ நமது மகள்கள் வென்றுள்ளனர். பொருளாதார ரீதியாகச் தற்சார்பு நிலையை பெண்கள் அடைந்து வருகின்றனர்.

### மகளிர் இடஒதுக்கீடுச் சட்டம்

பல்வேறுத் துறைகளில் பெண்களின் தலைமைத்துவம் அதிகரித்து வருகிறது. வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்தும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது நமது ஜனநாயகத்தின் போற்றத்தக்க சாதனையாகும். மக்களவையிலும், சட்டப் பேரவைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் நோக்கில், 2023-ல் மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டம் இயற்றப்பட்டது.

### இளைஞர்கள்: மதிப்பு மிக்கச் சொத்து

நமது நாட்டின் மக்கள் தொகையில் 65% பேர் 35 வயதுக்குட்பட்டவர்கள். இந்த இளைய சமுதாயமே நமது மதிப்பு மிக்கச் சொத்தாகும். நம் நாட்டின் இளைஞர்கள், திறமை மிக்கவர்கள், அர்ப்பணிப்பு உணர்வு கொண்டவர்கள். அடித்தட்டு அளவில் உள்ள பல்வேறு சவால்களை எதிர்கொள்ள இளைஞர்கள் உருவாக்கும் புதுமையான, நடைமுறைக்கு ஏற்றத் தீர்வுகளைக் காண்பது, சமூகத்தின் மீதும், நாட்டின் மீதும் நமது இளைஞர்களின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.

### இளைஞர்களுக்கு ஏராளமான புதிய வாய்ப்புகள்




## மாணவர்கள்: எதிர்கால இந்தியாவின் வடிவமைப்பாளர்கள்

நமது மாணவர்கள்தான் இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பவர்கள். நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசும், சமூகமும் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமோ, அதேபோல, நமது மாணவர்களின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் பாதுகாக்க அனைவரையும் ஒருங்கிணைத்த, கூட்டு முயற்சிகளும் அவசியம். பொதுத் தேர்வுகள், நமது மாணவர்களுக்கான வாய்ப்புகளின் நுழைவுவாயில்களாக அமைகின்றன; எனவே, இந்தத் தேர்வுகளில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர அரசு விரிவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பொதுத் தேர்வுகளில் முறையற்ற நடவடிக்கைகளை முற்றிலுமாகத் தடுப்பதும், தேர்வு முறையை இளைஞர்களுக்கு மிகவும் வெளிப்படையானதாகவும், பாதுகாப்பானதாகவும், நம்பகமானதாகவும் மாற்றுவதும் இந்தச் சீர்திருத்தங்களின் நோக்கங்களாகும்.

அரசின் முன்முயற்சிகளும், வளர்ந்து வரும் பொருளாதார நடவடிக்கைகளும், இளைஞர்களுக்கு ஏராளமான புதிய வாய்ப்புகளை உருவாக்குகின்றன. இத்தகைய புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம், நமது இளைஞர்கள் வெற்றியை நோக்கிய புதிய பாதைகளில் பயணிக்க முடியும். நமது இளைஞர்களின் உடல் நலனும், மன நலமும் நாட்டின் எதிர்காலத்தின் அடித்தளமாக அமைகின்றன. இளைஞர்களை உற்சாகத்துடன் முன்னேறிச் செல்ல ஊக்குவிப்பதில் குடும்பங்களுக்கும், சமூகத்திற்கும் பொறுப்பு உள்ளது.

### மூத்த குடிமக்களுக்கான திட்டங்கள்

மூத்த குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 70 வயது, அதற்கு மேற்பட்ட வயதுடைய சுமார் 6 கோடி முதியவர்களுக்கு, ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரையில் இலவச மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

### நக்சல் பாதிப்புப் பகுதிகளில் வளர்ச்சி

நக்சல்வாதம் இல்லாத நாடாக இந்தியாவை மாற்றியது ஒரு முக்கியச் சாதனையாகும். ஒரு காலத்தில் நக்சல்வாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இன்று உற்சாகம் பொங்குவதுடன், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியும் ஏற்பட்டு வருகிறது. பஸ்தார் ஒலிம்பிக் போட்டிகளில் ஏராளமான விளையாட்டு வீரர்கள் பங்கேற்றதுடன், பஸ்தார் பாண்டம் நிகழ்ச்சியில் பல்வேறு கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். இந்த நிகழ்வுகளைக் காண பார்வையாளர்கள் திரண்டனர்.

### ஒருங்கிணைந்த நவீன இந்தியாவை வடிவமைத்த சர்தார் வல்லபாய் படேல்



நாட்டின் விடுதலையின்போது, பிரிவினையால் ஏற்பட்ட மோசமான விளைவுகளுடன், 550-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை புதிய சுதந்திர இந்தியாவுடன் ஒன்றிணைக்கும் பெரும் சவாலும் எழுந்தது. சர்தார் படேல், மன்னராட்சி முறையை முடிவுக்குக் கொண்டுவந்து, அந்தச் சமஸ்தானங்களை நமது சுதந்திர ஜனநாயகக் கட்டமைப்புடன் இணைத்தார். நன்றியுணர்வுள்ள நாட்டு மக்களின் சார்பில், நவீன இந்தியாவின் ஒற்றுமையை வடிவமைத்த 'இரும்பு மனிதர்' சர்தார் வல்லபாய் படேலுக்கு எனது மரியாதையைச் செலுத்துகிறேன்.

### கல்வித்துறையில் புதிய அளவுகோல்கள்

மகாத்மா ஜோதிபா பூலேவின் 200-வது பிறந்தநாளை நமது மக்கள் உற்சாகமாகக் கொண்டாடுகின்றனர். மகாத்மா பூலேவும், கிராந்தி-ஜோதி சாவித்ரிபாய் பூலேவும், சமூக நீதி, கல்வி, பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், சமத்துவம் ஆகியவற்றில் வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்புகளை வழங்கினர். அவர்களது கொள்கைகளைப் பின்பற்றி, சமீப காலங்களில், தேசிய அளவில் சமூகத்தின் விளிம்புநிலை மக்களின் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. பெண் கல்வித் துறையில் புதிய அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

### வெளியுறவுக் கொள்கையின் தூண்களாகத் திகழும் 'வசுதைவ குடும்பகத்தின்' கோட்பாடுகள்

நமது வெளியுறவுக் கொள்கை, நாட்டின் நலனை அடித்தளமாகக் கொண்டுள்ளது. அமைதி, ஒத்துழைப்பு, பேச்சுவார்த்தை, *வசுதைவ குடும்பகம்* (உலகம் ஒரே குடும்பம்) என்ற கோட்பாடுகள் நமது வெளியுறவுக் கொள்கையின் தூண்களாகத் திகழ்கின்றன. பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தவும், பரஸ்பர உறவுகளை வலுப்படுத்தவும், பல்வேறு நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை நாம் மேற்கொண்டுள்ளோம்.

### நமது வலிமைமிக்க திறனின் சின்னங்கள்

நாட்டின் பெருமையைப் பாதுகாக்கும் வகையிலும், மராட்டிய ராணுவப் பாரம்பரியத்துடன் தொடர்புடைய 12 கோட்டைகள், கடந்த ஆண்டு யுனெஸ்கோ உலகப் பாரம்பரியச் சின்னங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டன. மேலும், இந்த ஆண்டு, பகவான் புத்தர் தனது முதல் போதனையை வழங்கிய இடமான சாரநாத், யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னங்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. ஒருபுறம், பகவான் புத்தருடன் தொடர்புடைய ஆன்மீகச் சின்னங்களின் புகலிடமாக மட்டுமின்றி, நமது பெருமையையும் உன்னதமான பாரம்பரியங்களையும் காப்பதற்கான நமது சிறப்பான திறனை வெளிப்படுத்தும் சின்னங்களின் இருப்பிடமாகவும் இந்தியா திகழ்கிறது.

### சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான, முன்னணி உலகளாவிய முன்முயற்சிகள்

நவீன வளர்ச்சியின் பாதையில் முன்னேறிச் செல்லும் அதே வேளையில், சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் உலக அளவில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. 2030-ம் ஆண்டிற்கான நிலையான வளர்ச்சி இலக்குகளில் சிலவற்றை நமது நாடு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்கு முன்னதாகவே அடைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை, இதுவரை இல்லாத வேகத்தில் வளர்ச்சியை அடைந்துள்ளது.

### புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கம்

நம் நாட்டில், நெடுஞ்சாலைகள், நீர்வழிகள், ரயில்வே, விமானப் போக்குவரத்து ஆகிய துறைகளில் நவீன உள்கட்டமைப்பு வசதிகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் விரிவடைந்துள்ளன. இது, புதிய தொழில் முயற்சிகளுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதுடன், வேலைவாய்ப்புகளைப் பெருக்கி, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கிறது.

# 2047-க்கான உறுதிமொழி
# வலிமையின்
# ஏழு தூண்கள்



செங்கோட்டைக் கொத்தளத்தில் இருந்து நாட்டு மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றியபோது, கடந்த 12 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சிப் பயணம் குறித்து இயல்பான திருப்தி உணர்வு மட்டுமின்றி, ஒரு மகத்தான, நவீன இந்தியாவைக் கட்டமைக்கும் உறுதியான தீர்மானமும் வெளிப்பட்டது. ஒரு தேசத்தின் தலைமை, மக்கள் மீது அக்கறை கொண்டிருக்கும்போது, அதன் வளர்ச்சி, வெறும் புள்ளி விவரங்களுக்குள் அடங்கி விடுவதில்லை; மாறாக, நாட்டை மேலும் சிறந்த நிலைக்கு முன்னேற்றுவதற்கான கூட்டு நிலைப்பாடும், அதனுடன் இணைந்த மன நிறைவும், குடிமக்களிடையே புதுமை, புத்துணர்ச்சிக்கான உத்வேகத்தை உருவாக்குகின்றன. 'தேசம் முதலில்' என்ற தாரக மந்திரத்தால் வழி நடத்தப்பட்டு, கடந்த 12 ஆண்டுகளில் இந்தியா உருவாக்கியுள்ள வளர்ச்சியின் புதிய அத்தியாயம், 2047–ம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை மாற்றும் இலக்கின் அடித்தளமாக மாறியுள்ளது. இத்தகைய பின்னணியில், வளர்ச்சியின் ஏழு தூண்கள் குறித்து ஆகஸ்ட் 15 அன்று பிரதமர் மோடி அறிவித்தார். இதன் மூலம், இந்த 13–வது உரை, எதிர்காலத்தை நோக்கிய நாட்டின் இடைவிடாத பயணத்திற்கான ஒரு வலுவான அறைகூவலாக அமைந்தது.



வந்தே மாதரம்!
சுஜலாம் சுபலாம் மலயஜ–சீதலாம்,
சஸ்ய– சியாமளாம் மாத்ரம்!
வந்தே மாதரம்!

சுப்ர–ஜோத்ஸ்நாம் புலகித யாமிநிம்,
புல்ல – குசுமிதா
த்ரும–தல–சோபிநிம்,
சுஹாசிநிம் சுமதுர பாசிநிம்,
சுகதாம் வரதாம் மாதரம்!
வந்தே மாதரம்!



இந்த ஆண்டின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி செங்கோட்டையை வந்தடைந்த போது, 'வந்தே மாதரம்' முழக்கத்தின் உணர்வும், கூட்டு உறுதியும் நிறைந்திருந்த அந்தச் சூழல், ஒரு புத்துணர்ச்சி மிக்க ஆற்றலை வெளிப்படுத்தியது. செங்கோட்டைக் கொத்தளத்தில் முதன்முறையாகத் தேசியப் பாடல் எதிரொலித்தது, நமது வளமான பாரம்பரியத்தைப் போற்றும் தருணமாக மட்டுமின்றி, சுதந்திரப் போராட்டத்தின் போது வெளிப்பட்ட உணர்வைப் போல 140 கோடி மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்திய தருணமாகவும் விளங்கியது. 19–வது நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20–ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்தியாவின் அடையாளத்தை வெளிபடுத்தி, தேசிய உணர்வையும் தூண்டிய பாடலாக 'வந்தே மாதரம்' எழுச்சி பெற்றது. இளைஞர்களின் உறுதியான தலைமைத்துவத்துடன், இன்று, 21–வது நூற்றாண்டில், இந்த மகத்தான தீர்மானத்தை நிறைவேற்றுவதை நோக்கி இந்தியா முன்னேறுகிறது. இதன் காரணமாகத்தான், 'வந்தே மாதரம் பாடலின் 150 ஆண்டுகள்', '2047–ல் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் பயணத்தில் இளைஞர் சக்தி' ஆகிய கருப்பொருட்களில் செங்கோட்டையில் இந்த ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

இளைஞர்களுக்காக ஒரு நிகழ்வு அர்ப்பணிக்கப்படும் போது, ஒரு 'புதிய இந்தியா', வளர்ச்சியின் புதிய காவியத்தை உருவாக்க ஆயத்தமாக உள்ளதையே அது உணர்த்துகிறது. இந்நிலையில், செங்கோட்டைக் கொத்தளத்தில் இருந்து பிரதமர் நரேந்திர மோடி தெளிவான ஒரு செய்தியை வெளியிட்டார்: 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற தொலைநோக்குப் பார்வையை எதார்த்தமாக மாற்ற இந்திய இளைஞர்கள் தயாராக உள்ளனர்.

### வளர்ச்சியடைந்த இந்தியாவின் உந்துசக்திகளாக மாறும் இளைஞர்கள்

இந்திய இளைஞர்களின் லட்சியங்கள், இன்று புதிய உச்சங்களை எட்டுகிறது. உலகின் இளமையான மக்கள் தொகையைக் கொண்ட நாடாக, வளர்ச்சியின் உந்துசக்தியாக இந்தியா மாறியுள்ளது. வேலை தேடுபவர்கள் என்ற நிலையிலிருந்து, வேலைகளை உருவாக்குபவர்களாக இந்திய இளைஞர்கள் மாறி வருகின்றனர். உலக அளவில் மூன்றாவது மிகப்பெரிய புத்தொழில் நிறுவன சூழலியலை இந்தியா உருவாக்கியுள்ளது. அதாவது, 'வளர்ச்சியடைந்த இந்தியாவின் உந்துசக்திகளாக இளைஞர்கள் திகழ்கிறார்கள். கல்வி, திறன் மேம்பாடு, தொழில் முனைவு போன்ற துறைகளில் கடந்த 12 ஆண்டுகளில் இளைஞர்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இந்தக் காலகட்டத்தில், வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் சுமார் 12 லட்சம் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதற்கு, செமிகண்டக்டர் உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு, புத்தாக்கம் போன்ற துறைகளில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. அதே வேளையில், பிரதமர் மோடியின் நல்லாட்சியில், டிஜிட்டல் தொழில்நுட்பம் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. அறிவியலும், தொழில்நுட்பமும் இன்று நல்லாட்சியின் இன்றியமையாத அங்கங்களாக விளங்குகின்றன.

80–வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள், இளைஞர்களின் திறனைப் பாராட்டி, அவர்களைக் கௌரவிக்கும் சிறப்பான தருணமாகவும் அமைந்தது. உலகின் இளமையான நாடான இந்தியா, மகத்தான லட்சியங்களை ஊக்குவிக்கும் வேளையில், கடந்த 12 ஆண்டுகளில் எண்ணிலடங்காத முன்முயற்சிகள் மூலம் மத்திய அரசு இந்தக் கனவுகளை நிஜமாக்கி உள்ளது. இந்தக் கொண்டாட்டங்களின் போது செங்கோட்டையில் முதன்முறையாக இளைஞர்களுக்குச் சிறப்பு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதம் ஆகிய பாடங்களுக்கான 2026 சர்வதேச ஒலிம்பியாட் போட்டிகளில் பதக்கங்களை வென்ற 19 மாணவர்களின் சாதனைகள், அறிவியல் துறையில் இளைஞர் சக்தியின் வெற்றிக்கு சான்றாக அமைகிறது. செங்கோட்டைக் கொத்தளத்தில் இந்த மாணவர்களுக்குச் சிறப்பு மரியாதை அளிக்கப்பட்டது. நாட்டின் உயரிய தலைவர், இளைஞர்களுக்கு வழங்கும் இந்தச் சிறப்பு அங்கீகாரம், இந்தியாவை ஒரு வளர்ச்சியடைந்த தேசமாக மாற்றும் தனித்துவமான முன்முயற்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இளம் கண்டுபிடிப்பாளர்கள், பிரதமரின் உள்ளகப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற சிறந்த பயிற்சியாளர்கள், முன்மாதிரியான புத்தொழில் நிறுவனங்கள், பிரதமரின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்கள், 'எனது இளம் இந்தியா' (மை பாரத்) அமைப்பின் தலைசிறந்த தன்னார்வலர்கள் ஆகியோருடன், நமஸ்தே, பிரதமரின் அஜய், சீட் திட்டங்களின் பயனாளிகளும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இளைஞர்கள், சமூகத்தின் இதர பிரிவினரின் லட்சியங்களைப் 'புதிய இந்தியா' எவ்வாறு நிறைவேற்றுகிறது என்பதை இது





பறைசாற்றுகிறது.

### வந்தே மாதரம்… வளமான பாரம்பரியம் முதல் வளர்ச்சியடைந்த இந்தியா வரையிலான ஒரு பயணம்

செங்கோட்டையில் நடைபெற்றது, 'வந்தே மாதரம்' பாடலை இசைப்பதற்கான நிகழ்வு மட்டுமின்றி, மலர் அலங்காரங்கள் முதல் கோட்டை கொத்தளங்களுக்கு முன்னால் உள்ள 'கியான் பாத்' பகுதியில் தன்னார்வலர்கள் 'வந்தே மாதரம்' என்ற வாசகத்தைக் காட்சிப்படுத்திய அணிவகுப்பு வடிவம் வரை அங்கு ஒரு கண்கவர் சூழல் நிலவியது. 'வந்தே மாதரம்' பாடலின் 150 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில், சிறப்பு பதாகை ஒன்றைத் தாங்கிய இந்திய விமானப்படையின் மிக்–17 ரக ஹெலிகாப்டர், செங்கோட்டையில் திரண்டிருந்த மக்களின் மீது பூ மழையைப் பொழிந்தது. தேசியப் பாடலின் 150–வது ஆண்டைக் குறிப்பதற்கான நிகழ்வாக மட்டுமின்றி, 'புதிய இந்தியாவிற்கான' தெளிவான செய்தியையும் இது வெளியிட்டது. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தின் சின்னமாக 'வந்தே மாதரம்' பாடல் மாறியது போலவே, இப்போது புதிய சிந்தனைகளுக்கும், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி முன்னேறுவதற்கும் இந்த நிகழ்வு ஊக்கமளிக்கும். 19–ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிலவிய அறிவுசார், இலக்கிய சூழலிலிருந்து உருவான வந்தே மாதரம் பாடல், தனது இலக்கிய வேர்களைக் கடந்து, காலனித்துவ எதிர்ப்புப் போராட்டம், கூட்டு லட்சியத்தின் வலிமை வாய்ந்த சின்னமாகத் திகழ்ந்தது. இந்த நிகழ்வு பங்கிம் சந்திர சாட்டர்ஜியின் தொலைநோக்குப் பார்வையை மீண்டும் வலியுறுத்துவது மட்டுமின்றி, நவீன இந்தியாவில் தேசியவாதம், ஒற்றுமை, கலாச்சாரம் குறித்த சுய விழிப்புணர்வு சார்ந்த விவாதங்களை வடிவமைப்பதில் இந்தப் பாடலின் பங்கு குறித்த சிந்தனையையும் இது தூண்டுகிறது.

இதன் காரணமாகவே, எதிர்காலத்தை நோக்கி அடியெடுத்து வைப்பதுடன், ஒரு மாபெரும் எழுச்சிக்குத் தயாராக இருக்கும் தேசத்தின் அடையாளமாக, இந்த 80–வது சுதந்திர தினத்தில் பிரதமர் மோடி ஏராளமான துணிச்சலான அறிவிப்புகளை வெளியிட்டார். செங்கோட்டைக் கொத்தளத்தில் இருந்து வெளியாகும் அறிவிப்புகள் அனைத்தும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்ற உண்மையின் அடிப்படையில் ஒரு நம்பிக்கை உருவாகியுள்ளது. தொடர்ந்து 13–வது முறையாக செங்கோட்டையிலிருந்து பிரதமர் மோடி ஆற்றிய உரையும், நாட்டின் அத்தகைய நம்பிக்கைக்குச் சான்றாக அமைந்துள்ளது.

### முழுமையான வளர்ச்சியும், நிரந்தரத் தீர்வுகளும்

தீர்க்க முடியாதவை என்று பல தசாப்தங்களாகக் கருதப்பட்டு, கைவிடப்பட்டிருந்த பிரச்சனைகளுக்குத் தற்போது நிரந்தரத் தீர்வுகள் காணப்பட்டிருப்பது, இந்த 12 ஆண்டுகால முன்னேற்றப் பயணத்தின் மிக முக்கியமான அம்சமாகும். "அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம், அனைவரின் நம்பிக்கை, அனைவரின் முயற்சி" என்ற மத்திய அரசின் வழிகாட்டும் கொள்கையின் அடிப்படையில் அமைந்த உறுதியான தீர்மானமும், மன உறுதியும் தான் பிரதமர் மோடியின் தனித்துவம் வாய்ந்த அடையாளங்கள் ஆகும். ஜம்மு காஷ்மீரில் பிரிவு 370 நீக்கம், வீடுகளில் கழிவறை வசதிகள், இலவச சமையல் எரிவாயுத் திட்டத்தின் வாயிலாக தூய்மையான எரிபொருள் வசதி, குடிநீர் குழாய் இணைப்புகள் திட்டம், தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வசதிகள், சுமார் 60 கோடி மக்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரையில் இலவச மருத்துவ சிகிச்சை வழங்கும் ஆயுஷ்மான் பாரத் போன்ற திட்டங்கள் மூலம், இந்தியா, தொடர்ந்து வெற்றியின் புதிய அத்தியாயங்களை உருவாக்கி வருகிறது.

அனைவருக்கும் உணவளிக்கும் விவசாயிகள், 'வளர்ச்சியடைந்த இந்தியாவின்' அடித்தளமாகத் திகழ்கின்றனர். பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி, பிரதமரின் பயிர்



காப்பீட்டுத் திட்டம், பிரதமரின் வேளாண் நீர்ப்பாசனத் திட்டம், பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையில் உயர்வு போன்ற ஏராளமான திட்டங்கள், விவசாயிகள் நலன், அவர்களின் வளர்ச்சிக்கு அடித்தளத்தை அமைத்துள்ளன.

வளர்ச்சியடைந்த இந்தியாவின் கட்டமைப்பில், மகளிர் சக்தியின் பங்களிப்பு, இன்றியமையாதது. இதன் விளைவாக, 'பெண்கள் தலைமையிலான வளர்ச்சி', ஒரு புதிய அணுகுமுறையாக உருவெடுத்துள்ளது. செல்வமகள் சேமிப்புத் திட்டம், 'பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம்; பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்' இயக்கம், 26 வாரகால மகப்பேறு விடுமுறை, வேலைவாய்ப்பிலும் சுயவேலை வாய்ப்பிலும் சமமான வாய்ப்புகள் போன்ற முன்முயற்சிகளின் வாயிலாக, தேசத்தைக் கட்டமைப்பதில் பெண்களும் தீவிரமான பங்களிப்பை வழங்குகின்றனர். மக்களவையிலும், மாநில சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு என்பது தற்போது எதார்த்தமாகியுள்ளது. இதைக் கள அளவில் வெகு விரைவில் செயல்படுத்தும் உறுதிப்பாடு, செங்கோட்டைக் கொத்தளத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. நெடுஞ்சாலைகள், ரயில்வே, விமான நிலையங்கள், நீர்வழிகள் துறைகளில் இதுவரை இல்லாத வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டுவருகிறது. வந்தே பாரத் விரைவு ரயில் சேவை, ரயில் பயணத்தை உள்நாட்டுத் தொழில்நுட்பம், வேகம், வசதியின் தனித்துவம் வாய்ந்த கலவையாக மாற்றியமைத்துள்ளது. பிரதமரின் விரைவுசக்திப் பெருந்திட்டம், பல்வகைப் போக்குவரத்து இணைப்பின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்கியுள்ளது. தொழில்நுட்பத்தால் முன்னெடுக்கப்படும் மாற்றத்தின் புதிய சகாப்தத்திற்கு வித்திட்டுள்ள 'டிஜிட்டல் இந்தியா' திட்டம், நாட்டின் கடைகோடி கிராமங்களில் கூட இணைய வசதி வழங்கப்படுவதை உறுதி செய்கிறது. ஒருங்கிணைந்த கட்டண முறையான யுபிஐ, டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் இந்தியாவை உலக அளவில் முன்னிலைப்படுத்தி உள்ளது.

## 'ஏழு தூண்கள்' மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஒரு புதிய ஆற்றல்

கடந்த 12 ஆண்டுகளில் சீர்திருத்தங்களில் இந்தியா புதிய உத்வேகம் பெற்றுள்ளது. இருப்பினும், 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை அடைவதற்கு, தொடர்ச்சியான, புதிய சீர்திருத்தங்களின் மூலம் முயற்சிகளை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்வது அவசியமாகிறது. அரசு, சமூகம், தொழில்துறை, உற்பத்தியாளர்கள், விவசாயிகள், சாமானிய மக்கள் என ஒவ்வொருவரும் தங்கள் பாரம்பரிய அமைப்புமுறைகளிலும், மனநிலைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதே தாரக மந்திரத்துடன், பிரதமர் மோடி, செங்கோட்டைக் கொத்தளத்தில் இருந்து 'ஏழு தூண்கள்' குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

**வலிமையின் முதல் தூண்– உற்பத்தியின் ஆற்றல்**
**வலிமையின் இரண்டாவது தூண்– வேளாண்மை மற்றும் உணவு உற்பத்தி**
**வலிமையின் மூன்றாவது தூண்– தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்**
**வலிமையின் நான்காவது தூண்– விரைவு சக்தி (போக்குவரத்து இணைப்பு, உள்கட்டமைப்பு)**
**வலிமையின் ஐந்தாவது தூண்– பாதுகாப்பு ஆற்றல்**
**வலிமையின் ஆறாவது தூண்– பசுமை பொருளாதாரம் மற்றும் கடல்சார் பொருளாதாரம்**
**வலிமையின் ஏழாவது தூண்– இந்தியாவின் மென்சக்தி (கலாச்சார மற்றும் பாரம்பரிய விழுமியங்கள்)**

கடந்த 5 முதல் 7 தசாப்தங்களாக நிலுவையில் இருந்த பணிகளை, வலிமையின் இந்த 'ஏழு தூண்கள்' மூலம் அடுத்த 5 முதல் 7 ஆண்டுகளுக்குள் நிறைவேற்ற இந்தியா உறுதிப்பூண்டுள்ளது. 80–வது சுதந்திர தினமும், செங்கோட்டையிலிருந்து பிரதமர் மோடியின் தொடர்ச்சியான 13–வது உரையும், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி கடந்த 12 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றங்களுக்குச் சான்றாகத் திகழ்கின்றன. இந்த மாற்றத்தைச் சந்தித்து வரும் தற்போதைய காலகட்டம் பொன்னான வரலாற்றை உருவாக்கும்.

***'வளர்ச்சியடைந்த இந்தியாவை' நோக்கி முன்னேறும் நாட்டிற்குப் புதியதொரு பாதையை வழங்கியுள்ள பிரதமர் மோடியின் உரையின் முக்கிய அம்சங்களை 13 அத்தியாயங்களில் நாம் ஆராய்வோம்...***

## வந்தே மாதரம் பாடலின் 150–வது ஆண்டு

# 80–வது சுதந்திர தினம்

*சுதந்திரத்திற்குப் பின் முதல்முறையாக, செங்கோட்டையிலிருந்து வந்தே மாதரம் பாடல் எதிரொலித்தது. தேசியப் பாடலின் 150–வது ஆண்டின் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தருணத்துடன் பிரதமர் மோடி இதை இணைத்தார்....*

- இன்று நாம் 80–வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறோம். இன்று, ஒவ்வொருவரது இதயத்துடிப்பிலும் 'வந்தே மாதரம்' என்ற முழக்கம் எதிரொலிக்கிறது.
- இன்று, "இல்லந்தோறும் மூவண்ணக்கொடி, ஒவ்வொரு இதயத்துடிப்பிலும் தேசியக்கொடி" என்ற உணர்வு மேலோங்கியிருப்பதுடன், நாடு, புதிய உறுதிமொழிகளுடன், உற்சாகத்துடனும், புத்துயிர்பெற்ற ஆற்றலுடனும் முன்னேறி வருகிறது.
- நாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்கள் இன்னுயிரை ஈந்த அந்த மாவீரர்களை நாடு இன்று மரியாதையுடன் நினைவுகூர்கிறது.
- சுதந்திரத்திற்குப் பின் முதல் முதல்முறையாக, ஆகஸ்ட் 15 அன்று செங்கோட்டையில் வந்தே மாதரம் எதிரொலிக்கிறது. வந்தே மாதரம் பாடலின் 150–வது ஆண்டை நாம் கொண்டாடும் வேளையில், இதைவிடச் சிறப்பான தருணம் வேறு என்ன இருக்க முடியும்?
- சமீப நாட்களில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட கடுமையான வெள்ளம், நிலச்சரிவுகளால், ஏராளமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களின் துயரத்தையும் வலியையும் நாங்கள் முழுமையாகப் புரிந்துகொள்கிறோம், உணர்கிறோம். நாங்களும், ஒட்டுமொத்த தேசமும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கிறோம் என்று பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நான் உறுதியளிக்க விரும்புகிறேன்.



**“இன்று, 80–வது சுதந்திர தினத்தை நாம் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு இதயத்துடிப்பிலும் ‘வந்தே மாதரம்’ என்ற முழக்கம் எதிரொலிக்கிறது. மூவண்ணக் கொடி, ஒவ்வொரு இல்லத்திலும் பறக்கிறது, ஒவ்வொரு மனதிலும் குடிகொண்டுள்ளது; புதிய உறுதிமொழிகளுடன், உற்சாகத்துடனும், பேரார்வத்துடனும் நாடு முன்னேறி வருகிறது.”**

*(2026 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*

2026 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

79வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்
அட்டைப்பக்கக் கட்டுரை

# 2047-ல் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான
# ஒரு தீர்மானம்

*நாடு சுதந்திரம் அடைந்து 2047-ம் ஆண்டில், 100 ஆண்டுகளை நிறைவு செய்யும் வேளையில், 140 கோடி மக்களின் கடின உழைப்புடன், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் தீர்மானத்தை பிரதமர் மோடி ஒன்றிணைத்துள்ளார்...*

- கனவுகள், உறுதிமொழிகள், திறன்களின் வலிமையுடன் முன்னோக்கிச் செல்லும்போதுதான், ஒரு மகத்தான நாடாக உருவெடுத்து, தனது இலக்குகளை அடைகிறது.
- இனி ஒருபோதும் நாம் சிறிய கனவுகளுடன் முன்னோக்கிச் செல்ல முடியாது. பெரிய கனவுகள் சிந்தனையை விரிவுபடுத்துவதுடன், தொலைநோக்குப் பார்வையையும் விரிவடையச் செய்கின்றன. உறுதியுடன் இருக்கும் போது, சிரமங்கள், பேரிடர்களுக்கு இடையே, அதிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளைக் கண்டறியும் திறன் இயல்பாக உருவாகிறது.
- தீர்மானங்களும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். ஏனெனில், கனவுகளும், தீர்மானங்களும் உயரமாக இருக்கும் போது, திறன்களின் அளவும் உயர்கிறது. அப்போதுதான் கனவுகளை நனவாக்க முடியும்.
- நாடு பல கனவுகளுடன் சுதந்திரம் பெற்றது. ஆனால், அதன் வேகத்தை அதிகரிக்க முடியவில்லை. தேவையான வேகத்தை எட்ட முடியவில்லை. "எல்லாம் நடக்கும், காரியங்கள் தானாகவே நிறைவேறும், என்ன நடக்கிறது என்று பார்ப்போம்" என்ற மனப்பான்மையில் சிக்கியிருந்தோம். 2014-ம் ஆண்டிற்குள், உலக நாடுகள் இந்தியாவை பலவீனமான ஐந்து பொருளாதார நிலையைக் கொண்டுள்ள நாடுகளின் பட்டியலில் இணைத்திருந்தது.
- 2047-ம் ஆண்டில், சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகளை நிறைவு செய்யும் போது, 140 கோடி மக்களின் முயற்சிகள், கடின உழைப்பின் மூலம், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கியிருக்க முடியும்.
- கடந்த 12 ஆண்டுகளில், சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த கோடிக்கணக்கான மக்கள், நாட்டை புதிய உச்சங்களுக்குக் கொண்டு செல்ல உறுதியுடனும், அர்ப்பணிப்புடனும், சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டனர். இவ்வளவு குறுகிய காலத்தில், 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீண்டு வந்துள்ளனர்.
- ஒரு காலத்தில், இந்தியா பலவீனமான ஐந்து பொருளாதார நாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டு வந்த நிலையில், 12 ஆண்டுகளுக்குள், முக்கியப் பொருளாதார வலிமை கொண்ட நாடாகவும், மிக விரைவான வளர்ச்சி கொண்ட நாடாகவும் உருவெடுத்துள்ளோம்.

**"தற்போது ஒரு புதிய இயல்பு நிலையை உருவாக்கியுள்ளோம்: பயங்கரவாதிகள், அவர்களுக்கு புகலிடம் அளிப்பவர்கள், அவர்களுக்கு உதவுபவர்கள் அல்லது நிதி அளிப்பவர்கள் ஆகியோர் இடையே, இனி எந்தவொரு வேறுபாடும் காட்டப்போவதில்லை."**

*(2025 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*



2025 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்



## அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் 12 ஆண்டுகள்:

# வேகம், அளவை வரையறுத்தல்

*புதிய இந்தியாவின் வளர்ச்சி நடவடிக்கைகளின் வேகம், முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. கடந்த 12 ஆண்டுகளில், உற்பத்தி, டிஜிட்டல் மேம்பாடு, சாமானிய மக்களுக்கான அன்றாட வசதிகள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் புள்ளிவிவரங்களை பிரதமர் மோடி பட்டியலிட்டார்...*

- கடந்த 12 ஆண்டுகளில், பாதுகாப்புத் துறை உற்பத்தி நான்கு மடங்காக அதிகரித்துள்ளது.
- காதி, கிராமத் தொழில்கள் துறையின் உற்பத்தி ஐந்து மடங்காகவும், மின்னணு சாதனங்களின் உற்பத்தி ஏழு மடங்காகவும் அதிகரித்துள்ளது.
- நவீன ரயில் பெட்டிகளின் உற்பத்தி 21 மடங்காகவும், அலைபேசி உற்பத்தி 35 மடங்காகவும் அதிகரித்துள்ளது.
- இணையத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நான்கு மடங்காகவும், வழங்கப்பட்ட காப்புரிமைகளின் எண்ணிக்கை நான்கு மடங்காகவும், டிஜிட்டல் பரிவர்த்தனைகள் 100 மடங்காகவும் அதிகரித்துள்ளன.
- முன்பை விட சராசரியாக, 15 மடங்கு வேகத்தில், குழாய் வழி குடிநீர் இணைப்புகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.
- ஆண்டுதோறும் சராசரியாக ஆறு மடங்கு வேகத்தில் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஏழைகளுக்கான கழிப்பறைகள் அமைக்கும் பணி ஆண்டுக்கு நான்கு மடங்கு வேகத்தில் நடைபெற்றுள்ளது. மேலும், ஏழைகளுக்கு வீடுகள் வழங்கும் நடவடிக்கைகள் ஆண்டுக்கு மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.
- ஆயிரக்கணக்கான நடைமுறைச் சிக்கல்கள் களையப்பட்டுள்ளன. காலாவதியான நூற்றுக்கணக்கான சட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.
- முந்தைய நூற்றாண்டின் சட்டங்களைக் கொண்டு, 21-ம் நூற்றாண்டின் பயணத்தை மேற்கொள்ள முடியாது.
- நவீன உள்கட்டமைப்பு வசதிகளுக்காக, மெட்ரோ ரயில் கட்டமைப்புக்களை மத்திய அரசு விரிவுபடுத்தியுள்ளதுடன், பொதுப் போக்குவரத்து அமைப்புகள் வலுப்படுத்தபட்டுள்ளது.
- பணிகள் மேற்கொள்ளப்பட்ட வேகம், அதன் அளவுகோல் விரிவாக்கப் பணிகள் மற்றும் இத்தகைய சாதனைகளை நாடு சுதந்திரம் அடைந்த பிந்தைய தசாப்தங்களில், முதன்முறையாகக் காணும் நிகழ்வுகளாக உள்ளது.



**"மத்திய அரசு ஒரே ஒரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது: 'நாடு முதன்மையானது', தேசிய நலனே மிக முக்கியமானது. அரசு மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையும், இந்தியாவை உண்மையிலேயே சிறந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற உறுதியான செயல்பாடுகளால் வழிநடத்தப்படுகிறது."**

*(2024 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*

2024 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

# தற்சார்பு இந்தியா: செமிகண்டக்டர், அரியவகைக் கனிமங்கள்

*தற்சார்பு என்பது உறுதியான நம்பிக்கை என்று குறிப்பிட்ட பிரதமர் மோடி, செமிகண்டக்டர், அரியவகைக் கனிமங்கள் துறையில், இந்தியாவின் புதிய வலிமையை எடுத்துரைத்தார்...*

- உலகில் குறைந்த விலையில், விரைவாகக் கிடைக்கக்கூடிய பல்வேறு பொருட்கள் இருக்கும் நிலையில், அவற்றை சார்ந்திருக்கும் நிலை, ஒரு நாட்டின் திறன்களை வளர்க்கவோ அல்லது அதன் வலிமையைச் சோதிக்கவோ உதவாது. எனவே, நாட்டின் திறன்களை வலுப்படுத்திக் கொள்வதுடன், நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.
- தற்சார்பு இந்தியா என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் நாடு முன்னேறி வருகிறது. 'இந்தியாவில் உற்பத்தி செய்வோம்', 'சுதேசி' மற்றும் உள்ளூர் பொருட்களுக்கு முன்னுரிமை அளிப்பது போன்ற முன் முயற்சிகளுடன், இந்திய மக்களின் எண்ணங்கள் ஒன்றிணைந்துள்ளன.
- மின்னணுப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் அல்லது போக்குவரத்து அமைப்புகள் என எதுவாக இருந்தாலும், செமிகண்டக்டர் சிப்கள் அனைத்து இடங்களிலும் இன்றியமையாத ஒன்றாக உள்ளன.
- இன்றைய டிஜிட்டல் உலகில், சிப்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, சிப்கள் இல்லாவிட்டால் ஒட்டுமொத்த அமைப்பும் முடங்கிப்போகும் என்ற நிலையை உலகம் எட்டியுள்ளது. ஆனால், நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, இது தொடர்பான எந்தவொரு பெரிய திட்டத்தையும் முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை.
- ஏற்கனவே மூன்று பெரிய செமிகண்டக்டர் உற்பத்தி ஆலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த ஆலைகளிலிருந்து உற்பத்தியாகும் பொருட்களின் ஏற்றுமதியும் தொடங்கியுள்ளது.
- அடுத்த 7 முதல் 8 ஆண்டுகளுக்குள், மேலும் 5, 7 அல்லது 8 செமிகண்டக்டர் உற்பத்தி ஆலைகள் செயல்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய செயல்பாடுகள் தற்சார்பு இந்தியா, வளர்ச்சியடைந்த இந்தியா போன்ற நிலையை எட்டுவதற்கான ஒரு சிறந்த பாதையை அமைத்துத் தருகிறது.
- தேசிய அரியவகைக் கனிமங்கள் இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது. மேலும் பட்ஜெட்டில், அரியவகைக் கனிமங்களுக்கான வழித்தடம் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி வருகின்றன. அரியவகைக் கனிமங்கள் துறையில், உலகின் பல்வேறு நாடுகள் தற்போது இந்தியாவின் மீது நம்பிக்கை கொண்டுள்ளன.

**“அடிமை மனப்பான்மையைக் கைவிட்டு, ஐந்து உறுதிமொழிகள் கொள்கைக்கு அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஒரு நாடு, இன்று, புத்துயிர் பெற்ற தன்னம்பிக்கையுடன் முன்னேற்றம் கண்டு வருகிறது. இந்த புதிய தீர்மானங்களை நனவாக்க, அது முழு மனதுடன் பாடுபட்டு வருகிறது.”**

*(2023 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*



2023 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

# எரிசக்தி பாதுகாப்பு: அணுசக்தியிலிருந்து சூரிய சக்திக்கான புரட்சி வரை

*எரிசக்தி பாதுகாப்பு தற்போதைய காலத்தின் மிக முக்கியத் தேவையாக உள்ளது என்று குறிப்பிட்ட பிரதமர் மோடி, அணுசக்தி, சூரிய எரிசக்தி, எரிவாயு, ஹைட்ரஜன் சக்தி ஆகிய துறைகளில், இந்தியாவின் சாதனைகளையும், எதிர்கால உறுதிப்பாட்டையும் மீண்டும் வலியுறுத்தினார்...*

- எதிர்காலத் தொழில்நுட்பங்களை நோக்கி முன்னேறும் போது, எரிசக்தியின் முக்கியத்துவம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எரிசக்தி இன்றி புதிய உலகத்தை இயக்குவது தற்போது கடினமானதாக உள்ளது.
- சிப்கள், செயற்கை நுண்ணறிவு அல்லது தரவு மையங்கள் என எதுவாக இருந்தாலும், மின்சாரம் மிக அதிக அளவில் தேவைப்படும் ஒன்றாக உள்ளது. இதற்கென பல்வேறு வலுவான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது.
- நாடாளுமன்றத்தில் 'சாந்தி' சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம், 2047-க்குள் 100 ஜிகாவாட் அணுசக்தி உற்பத்தி என்ற இலக்கை அடைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- இந்த பத்தாண்டுகளுக்குள், 5 புதிய அணுமின் நிலையங்களை அமைப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், அதிவேக ஈனுலை அணுசக்தி தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னேற்றம் அடைந்துள்ளது.
- முன்பு தடைசெய்யப்பட்டிருந்த கடலோரப் பகுதிகள் தற்போது செயல்பாட்டிற்கு உகந்த பகுதிகளாக மாற்றப்பட்டுள்ளன. இப்பணிகளை விரைவுபடுத்த ஆழ்கடல் ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ 85,000 கோடி ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.
- 2014-ம் ஆண்டுக்கு முன்பு, 70 நகரங்களில் மட்டுமே குழாய் வழி எரிவாயு கட்டமைப்பு வசதி இருந்தது. தற்போது, இந்த வசதி 700 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- 2014-க்கு முன்பு, குழாய் வழி எரிவாயு வசதி சுமார் 20-22 லட்சம் வீடுகளுக்கு மட்டுமே சென்றடைந்தது. தற்போது, 1.75 கோடி வீடுகளுக்கு இந்த சேவையை வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, சூரிய சக்தி உற்பத்தித் திறன் 2 ஜிகாவாட்டாக இருந்தது. தற்போது, 160 ஜிகாவாட் உற்பத்தித் திறன் எட்டப்பட்டுள்ளது.
- பிரதமரின் சூரிய வீடு இலவச மின்சாரத் திட்டம் 50 லட்சம் வீடுகளைச் சென்றடைந்துள்ளது. குடும்பத்திற்கு தலா ரூ 80,000 நிதியுதவி வழங்குவதன் மூலம், ஆயிரக்கணக்கானோர் தற்போது பூஜ்ஜிய மின்சாரக் கட்டணத்தைப் பெறுவதுடன், உபரி மின்சாரத்தை விற்பனை செய்து வருமானமும் ஈட்டி வருகின்றனர்.
- 90 ஆண்டுகளில் ரயில்வே மின்மயமாக்கல் பணிகள் 30% என்ற அளவிலேயே இருந்தது. ஆனால், கடந்த 10 ஆண்டுகளில், எஞ்சியுள்ள 70% பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளது. இதுவே, உண்மையான செயல்டாகும்.



**"இந்தப்பயணத்தை மத்திய அரசு எத்தகைய உறுதியுடன் தொடங்கியுள்ளது என்பதை உலக நாடுகள் கவனித்துக் கொண்டிருக்கின்றன. பிற நாடுகள் இந்தியா மீது நம்பிக்கை கொண்டுள்ளன. இத்தகைய விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான உண்மையான வலிமை எங்குள்ளது என்பதை உலக நாடுகள் உணரத் தொடங்கியுள்ளன."**

*(2022 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*

2022 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

# மக்களே தெய்வம்: உலகளவில் நிலவி வரும்
# நெருக்கடிகளுக்கு மத்தியில், வலிமையான இந்தியா

*கொவிட் பெருந்தொற்று முதல் மேற்கு ஆசியாவில் நிலவும் நெருக்கடி வரை, கடந்த 12 ஆண்டுகளில், இந்தியா வகுத்துள்ள நன்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள், நாட்டைத் திறனுள்ளதாகவும், தற்சார்பு கொண்டதாகவும் மாற்றியமைத்துள்ளன என்பதைப் பிரதமர் மோடி எடுத்துரைத்துள்ளார்...*

- கொவிட்–19 போன்ற ஒரு பெருந்தொற்று பரவல், உலக நாடுகள் அனைத்தையும் நிச்சயமற்ற சூழலுக்குத் தள்ளியதுடன், அனைத்து அமைப்புகளையும் சீர்குலைத்தது. ஆனால், கொவிட் பாதிப்பிலிருந்து, இந்தியா மீண்டு வந்தபோது, போரால் ஏற்பட்ட இன்னல்கள் தலைப்புச் செய்திகளாக மாறத் தொடங்கின.
- உக்ரைன் அல்லது மேற்கு ஆசியா என எங்கும், பதற்றமான சூழல் நிலவியது. 'எதிர்காலத்தைக் கணிப்பவர்கள்' என்று கூறிக் கொண்டிருப்பவர்கள் எவற்றைக் கணித்து வைத்திருந்தனர் என்பது யாவரும் அறியாத ஒன்று. நாட்டை அச்சுறுத்தி, பயத்துடன் வைத்திருக்கச் சிலர் விரும்புகின்றனர். தடுப்பூசிகள் கிடைக்காது என்றும், பெட்ரோல், டீசல் மற்றும் உரங்கள் கிடைக்காது என்றும் வதந்திகள் பரப்பப்பட்டன.
- கடந்த 10–12 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நன்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் பலனளித்து வருவதை நாடு கண்டுள்ளது. தற்போது, இந்தியாவில் எரிவாயு, பெட்ரோல், யூரியா ஆகியவை தாராளமாகக் கிடைக்கின்றன.
- இத்தகைய பெரும் நெருக்கடிகளுக்கு இடையே, மக்களே தெய்வம் என்ற கொள்கையின் வழிகாட்டுதலுடன் இந்தியா செயல்பட்டு வந்தது.
- இந்த நெருக்கடிகள் நாட்டின் வளர்ச்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்தின. உலகளவில், ஒரு மூட்டை யூரியாவின் விலை ரூ. 3,000–ஐ எட்டியது. இருப்பினும், அவற்றை அரசு விவசாயிகளுக்கு வெறும் ரூ. 300–க்கு வழங்கி வருகிறது.
- டிஏபி உரத்தின் உலகச் சந்தை விலை ரூ 5,000–ஐ எட்டியுள்ளது. ஆனால், மத்திய அரசு அதைத் தொடர்ந்து, ரூ. 1,350–க்கே வழங்கி வருகிறது.
- பெட்ரோல், டீசல், உரங்கள், மருந்துகள், சிப்கள், நிலப்பரப்பு ஆகியவற்றை ஆயுதங்களாகப் பயன்படுத்தும் செயலில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.
- தற்சார்பு என்ற தாரக மந்திரத்தின் வழிகாட்டுதலுடன், கடந்த பத்தாண்டுகளில், நாடு சரியான திசையில் பயணிக்காமல் இருந்திருந்தால், இத்தகைய சவால்களை இந்தியா எவ்வாறு எதிர்கொண்டிருக்க முடியும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.
- தற்சார்பு நிலை குறித்து பேசிக்கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், குளிரூட்டப்பட்ட அறைகளில் அமர்ந்திருந்தவர்கள், 'உலகமயமாக்கல் நிலை என்னவாகும்? என்று கேள்வி எழுப்பினர்.
- ஆனால் கடந்த பத்தாண்டுகளில், உலகம் ஒரு விஷயத்தைக் காண்கிறது. உலகமயமாக்கல் குறித்த பேச்சுக்கள் நின்றுவிட்டதைப் போலத் தோன்றுகிறது. ஒரு காலத்தில், உலகமயமாக்கல் குறித்து, எழுப்பப்பட்ட குரல்கள் தற்போது கேட்பதில்லை.

**"நாம் யாருக்கும் சளைத்தவர்களாக இருக்கக்கூடாது. இது எண்ணற்ற நாட்டு மக்களின் உறுதியான தீர்மானமாகும். எனினும், தீவிரமான கடின உழைப்பும், அசாத்திய துணிச்சலும் இல்லாவிட்டால், அந்தத் தீர்மானம் முழுமையடையாது."**

*(2021 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*



2021 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

80வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்
அட்டைப்பக்கக் கட்டுரை

## புதிய ஏழு முக்கிய அறிவிப்புகள்,

# புதிய உத்வேகத்தை அளிக்கின்றன

*செங்கோட்டையிலிருந்து, பிரதமர் மோடி, அதிகாரத்தின் புதிய ஏழு சக்தி வாய்ந்த அறிவிப்புகளை நாட்டு மக்களின் முன் வெளியிட்டார். இது அடுத்த 5 முதல் 7 ஆண்டுகளில், வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுப்பதற்கான இலக்குகளை அடைய, இந்தியாவிற்கு வலுசேர்க்கும்...*

- கால் நூற்றாண்டுகள் கடந்துவிட்ட நிலையில், அடுத்த கால் நூற்றாண்டு நம் அனைவருக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்த காலமாகும். வளர்ச்சியின் வேகம் தடைபடாமல், முன்னேற்றப் பாதையில் உறுதியுடன் பயணித்து, இலக்கை அடைய வேண்டும்.
- இந்தியாவில், பணி சார்ந்த கலாச்சாரம் மற்றும் சிந்தனையை மாற்ற வேண்டும். அதேபோல், பணியின் வேகத்திலும் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும்.
- கடந்த ஐம்பது முதல் எழுபது ஆண்டுகளில், நிறைவேற்றப்படாத பணிகளை, வரவிருக்கும் ஐந்து முதல் ஏழு ஆண்டுகளில், செய்து முடிக்க வேண்டும்.
- சீர்திருத்தம் என்பது கட்டாயமோ அல்லது வெறும் கவர்ச்சியான சொல்லோ அல்ல. மாறாக, சீர்திருத்தம் என்பது ஒரு உறுதியான நம்பிக்கையாகும். மத்திய அரசு சீர்திருத்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவின் வலிமை என்பது ஏழு நதிகள் என்று அறியப்பட்ட அந்த காலத்தையும், நினைவுகூர விரும்புகிறேன். இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்கச் செய்வதற்கு ஏழு வலிமையான செயல்பாடுகள் அவசியமாகும்.
- ஏழு அறிவிப்புகளும், இந்த ஏழு வலிமைகளை ஏதோ ஒரு குறிப்பிட்ட துறையில் முன்னேற்றம் காண்பதைக் குறிப்பது மட்டுமின்றி, ஒரு முழுமையான நடைமுறையுடன், நாட்டின் வளர்ச்சிக்கான இலக்குகளை விஞ்சும் வகையில் செயல்பட வேண்டும்.
- ஒரு தேசம் என்பது அரசு நிர்வாகத்தை மட்டும் சார்ந்திராமல், ஒவ்வொரு குடிமக்களாலும் கட்டமைக்கப்பட்டதாகும். அடுத்த பத்தாண்டு காலத்திற்குள், முக்கிய 500 நிறுவனங்களில், 50 நிறுவனங்கள் இந்திய நிறுவனங்களாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- உலகின் முதல் ஐந்து வங்கிகளில், ஒரு இந்திய வங்கி இருக்க வேண்டும். அதேபோல், உலகின் முதல் ஐந்து மருந்து நிறுவனங்களில், ஒன்று அல்லது இரண்டு இந்திய மருந்து நிறுவனங்களின் பெயர்களும் இடம்பெற வேண்டும்.
- சட்ட நிறுவனங்கள், மதிப்பீட்டு முகமைகள், ஆலோசனை, கணக்கியல் நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் என அனைத்திலும், இந்தியா உலகளவில், முன்னணி நாடாகத் திகழ வேண்டும். உலக நாடுகளை ஈர்க்கும் வகையில், வர்த்தக முத்திரைகள் கொண்ட பொருட்களை உருவாக்க வேண்டும்.

**“ஏழு அறிவிப்பின் இந்த ஏழு வலிமைகளும், தனித்தனி துறைகளில் முன்னேற்றம் காண்பதைக் குறைப்பதுடன், ஒரு முழுமையான நடைமுறையுடன், நாட்டின் வளர்ச்சிக்காக நிர்ணயித்துள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை விஞ்சும் வகையில் செயல்பட வேண்டும்.”**

*(2020 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*



2020 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

# ஏழு முக்கிய வலிமைகள்



## முதலாவது வலிமை

**உற்பத்தித் திறன்:** செலவு, தரம், அளவு ஆகியவற்றில், இந்தியா உலகளவிலான தரநிலைகளை எட்ட வேண்டும். 'தரம், தரம், தரம்' என்பதே, நாட்டின் தாரக மந்திரமாக இருக்க வேண்டும். குறைபாடற்ற, துல்லியமான உற்பத்தி முறையே, நாட்டின் அடையாளமாக மாற வேண்டும்.

## இரண்டாவது வலிமை

**விவசாயம் மற்றும் உணவு உற்பத்தி:** பண்ணை முதல் ஏற்றுமதிக்கான சந்தை வரை, இந்தியாவின் சிறுதானியங்கள், நறுமணப் பொருட்கள், பழங்கள், பூக்கள் ஆகியவை, உலகளவில், வர்த்தக முத்திரைகளாக மாற வேண்டும்.

## மூன்றாவது வலிமை

**தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்:** இந்தியா புத்தாக்கத்தின் மையமாகத் திகழ வேண்டும். அடுத்த தலைமுறை தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களில், இந்தியா முன்னணி நாடாகத் திகழ வேண்டும். மேலும், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 6ஜி தொழில்நுட்பம், நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சென்றடைய வேண்டும்.

## நான்காவது வலிமை

**விரைவு சக்தி:** நாட்டில் தடையற்ற, விரைவான போக்குவரத்து இணைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். அதிவேக ரயில், நவீன நெடுஞ்சாலைகள், உள்நாட்டு நீர்வழிகள், விமான நிலையங்கள், துறைமுகத்தை மையமாகக் கொண்ட வளர்ச்சி நடவடிக்கைகள் ஆகியவை இதில் அடங்கும்.

## ஐந்தாவது வலிமை

**பாதுகாப்புத் திறன்:** பாதுகாப்புத் துறையில், தன்னிறைவு அடைவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை இந்தியாவும், உலக நாடுகளும் உணர்ந்துள்ளன. இதற்கென, அடுத்த தலைமுறை பாதுகாப்புத் தொழில்நுட்பம், ட்ரோன்கள், ட்ரோன் எதிர்ப்பு தொழில்நுட்பம், ஹைப்பர்சோனிக் பாதுகாப்பு ஆகியவற்றில், இந்தியா முன்னணி நாடாக உருவெடுக்க வேண்டும்.

## ஆறாவது வலிமை

**பசுமை மற்றும் கடல்சார் பொருளாதாரம்:** பசுமை ஹைட்ரஜன், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மீன்வளம், கடலோரச் சுற்றுலா ஆகியவை. பசுமை ஹைட்ரஜன், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, எரிசக்தி சேமிப்பு, பசுமைப் போக்குவரத்து, பசுமை உற்பத்தி ஆகியவற்றில் நாம் உலக அளவிலான சாதனைகளை எட்ட வேண்டும். நமது நீண்ட கடற்கரைப் பகுதியைக் கருத்தில் கொள்ளும்போது, கடல்சார் பொருளாதாரத்திலும் மிகப்பெரிய வாய்ப்புகள் உள்ளன.

## ஏழாவது வலிமை

**இந்தியாவின் மென் சக்தி:** யோகா, ஆயுர்வேதம், இந்தியாவில் சிகிச்சை அளிப்பது, திரைப்படங்கள், அனிமேஷன், கேமிங், வேவ்ஸ் உச்சிமாநாடு. இந்தியாவின் மென் சக்தியின் வலிமை அளப்பரியது. தற்போது, யோகா உலகின் அனைத்து நாடுகளையும் இந்தியாவுடன் இணைத்துள்ளது.

# உலக வர்த்தகமும், இந்தியாவின் அதிகரித்து வரும் நம்பகத்தன்மையும்

*இந்தியாவில் அமைந்துள்ள நிலையான அரசையும், செயல்திறன்மிக்க ஜனநாயக நடைமுறைகளையும் உலக நாடுகள் தற்போது அங்கீகரித்து வருகின்றன. தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் (எம்எஸ்எம்இ), ஏற்றுமதிக்கும், புதிய வாய்ப்புகள் உருவாகும் என்று பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்...*

- தற்போது, இந்தியா மீதான நன்மதிப்பு கணிசமான அளவில் உயர்ந்து வருகிறது. உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, மதிக்கப்படும் நாடாக, இந்தியா உருவெடுத்து வருகிறது.
- 2014–க்குப் பிறகு, மத்திய அரசு 40 நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இது ஒரு மிகப்பெரிய வாய்ப்பாகும்.
- குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இத்தகைய வாய்ப்பைத் தவறவிடக்கூடாது. நாட்டில் தயாரிக்கப்படும் ஜவுளி, எந்திரங்கள், மருந்துகள், உலக நாடுகளைச் சென்றடையச் செய்ய வேண்டும். உலகளவில், எல்லைகளைக் கடந்து, தற்போது கிடைக்கும் பொருட்களைக் காட்டிலும் உயர் தரத்திலான பொருட்களை இந்தியா வழங்க வேண்டும்.
- இந்தியாவின் கடல் உணவுகள், உலக நாடுகளைச் சென்றடைவதற்கு அதிக வாய்ப்புள்ளது. மேலும், நாடு முன்னேற்றப் பாதையில் செல்லும்போது, இது போன்ற சூழல்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.
- இந்தியாவின் ஒவ்வொரு தயாரிப்பும், உலகச் சந்தையைச் சென்றடைய வேண்டும். அது ஜவுளி, எந்திரம் என எதுவாக இருந்தாலும் அல்லது மருந்துகளாக இருந்தாலும், எந்தவொரு வாய்ப்பையும் தவறவிடக்கூடாது.
- உலகளவில் கிடைக்கும் பொருட்களைக் காட்டிலும், உயர்ந்த தரத்தில், குறைந்த விலையில் பொருட்களை வழங்க வேண்டும். பஞ்சாபில் உள்ள லூதியானா முதல், தமிழ்நாட்டில் உள்ள திருப்பூர் வரை, இந்திய ஜவுளித் துறை உலகளவிலான சந்தை வாய்ப்புகளை எட்டும் ஆற்றலைக் கொண்டுள்ளது.
- கேரளா முதல் குஜராத் வரையிலும், தமிழ்நாடு முதல் வங்காளம் வரையிலும், இந்திய மீனவ சகோதர, சகோதரிகள், இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் காரணமாக, இறால் ஏற்றுமதி செய்வதற்கு, தற்போது, மிகப் பெரிய வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.
- இந்தியா ஒரு நிலையான அரசையும், செயல்திறன்மிக்க ஜனநாயக நடைமுறையையும், வலுவான நீதித்துறை கட்டமைப்பையும் கொண்டுள்ளது. இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம், அனைவருக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. மேலும், இந்தியாவின் இந்த வலிமையை, உலக நாடுகள் தற்போது அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளன.



**“தற்போது, ஒவ்வொரு இந்தியரும் ‘ஒரே தேசம், ஒரே அரசியலமைப்பு’ என்று பேச முடியும் என்பதை, என்னால் பெருமையுடன் கூற முடியும். மேலும், சர்தார் பட்டேலின் ‘ஒரே இந்தியா, உன்னத இந்தியா’ என்ற கனவை நனவாக்க மத்திய அரசு அர்ப்பணிப்புணர்வுடன் செயல்படத் தயாராக உள்ளது.”**

*(2019 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*

2019 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

# இளையோர் சக்தியும், டிஜிட்டல் புரட்சியும்

*புத்தொழில் இந்தியா முதல் செயற்கை நுண்ணறிவுத் திறன் பயிற்சி வரை, வளர்ச்சியடைந்த இந்தியாவின் மாபெரும் சக்தியாகவும், மாபெரும் பயனாளிகளாகவும் திகழ வேண்டும் என்று நாட்டின் இளைஞர்களுக்கு, பிரதமர் மோடி, செங்கோட்டையிலிருந்து அழைப்பு விடுத்தார்...*

- வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்கை நோக்கிய பயணத்தில், இளைஞர்களுக்கு மிக முக்கியப் பங்கு உள்ளது. வளர்ச்சியடைந்த இந்தியாவின் மாபெரும் பயனாளிகளும் இளைஞர்களே ஆவர்.
- புத்தொழில் இந்தியா திட்டத்தின் கீழ், தற்போது, நாடு முழுவதும், 2.5 லட்சத்திற்கும் அதிகமான புத்தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மத்திய அரசு ரூ. 1 லட்சம் கோடி மதிப்பிலான புத்தாக்க நிதியத்தை அறிவித்துள்ளது.
- சராசரியாக 28 வயதுடைய இளைஞர்களின் தலைமையில் இயங்கும் இந்தியாவின் தனியார் புத்தொழில் நிறுவனங்கள், தங்களது செயற்கைக்கோள்களையும், ராக்கெட்டுகளையும் முதல் முயற்சியிலேயே வெற்றிகரமாக விண்ணில் செலுத்தின.
- அடுத்த ஆண்டில் ஒரு கோடி இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவுத் திறன்களில் பயிற்சி அளிக்கப்படும். இது இளைஞர்களை உலகளவில் செயற்கை நுண்ணறிவு சகாப்தத்தில் முன்னணியில் இருக்க உதவிடும்.
- 2004 முதல் 2014 வரை, 350–க்கும் குறைவான பல்கலைக்கழகங்கள் மட்டுமே இருந்தன. தற்போது, 650 புதிய பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதன் மூலம், 1,000 என்ற எண்ணிக்கையை எட்டும் நிலையில் இருக்கிறோம்.
- 2014–ம் ஆண்டிற்கு முன்பு, 400 மருத்துவ கல்லூரிகள் மட்டுமே இருந்தன. தற்போது, 850 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும் தற்போது, இந்தியாவிற்கு வருகின்றன.
- இளம் குழந்தைகளுக்காக நாம் 10,000–க்கும் அதிகமான அடல் சிந்தனை ஆய்வகங்களை உருவாக்கியுள்ளோம்.
- 2014–க்கு முன்பு, உயிரிப் பொருளாதாரத்தின் வருவாய் ரூ.60,000 கோடியாக இருந்தது. தற்போது, அது ரூ.20 லட்சம் கோடியை எட்டியுள்ளது.
- 2009–10–ம் ஆண்டில், 1.5 லட்சம் மின்சார வாகனங்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வந்தன. 2025–26–ல், 25 லட்சம் மின்சார வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விமானங்களின் உற்பத்தியில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பாதுகாப்புப் படைக்கான போக்குவரத்து விமானம் சி295, ஏற்கனவே வானில் பறக்கவிட்டு வெற்றிகரமாக சோதனை ஓட்டத்தை நிறைவு செய்துள்ளது.
- ட்ரோன்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சுவமித்வா திட்டம், கிராமங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 3.25 கோடி குடும்பங்கள், இதன் மூலம் பயனடைந்துள்ளன.
- நடுத்தர வகுப்பைச் சேர்ந்த குடும்பங்களின் சுமையைக் குறைக்கும் வகையில், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் இளைஞர்களுக்கு, இலவச இணையவழிப் பயிற்சி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

**"ஒரு காலத்தில், உலக நாடுகள் இந்தியாவின் பொருளாதார நிலையை, அதிக இடர்ப்பாடு கொண்டதாகக் கருதியது. தற்போது, அதே நாடுகளும், நிறுவனங்களும், விரைவான சீர்திருத்த நடவடிக்கைகள், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைக் கட்டமைப்புக்களை வலுப்படுத்துகிறது என்று மிகுந்த நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றனர்."**

*(2018 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*





2018 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

80வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்
அட்டைப்பக்கக் கட்டுரை

## விளையாட்டில் சிறந்த இந்தியா மலர்கிறது

# போதைப்பொருள் இல்லாத இந்தியா

*2036 ஒலிம்பிக், 2030 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கான ஆயத்தப் பணிகளுக்கு அழைப்பு விடுத்ததோடு, இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விலகி இருக்குமாறும் பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.*

- விளையாடுபவர்கள் செழிக்கிறார்கள். இந்தியாவின் தேசிய கீதம் இப்போது உலக விளையாட்டு மேடைகளில் ஒலிக்கிறது. மூவண்ணக் கொடியும் பெருமையுடன் பறப்பதைக் காணலாம்.
- டாப்ஸ் எனப்படும் ஒலிம்பிக் பதக்க இலக்குத் திட்டம், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள், பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள், குளிர்கால விளையாட்டுப் போட்டிகள், கடற்கரை விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாடு, விளையாட்டுப் பயிற்சி, விளையாட்டு மருத்துவம், விளையாட்டுகளுக்கான ஊட்டச்சத்து என இந்த அனைத்திலும் சிறந்து விளங்குவதை நோக்கி இந்தியா முன்னேறி வருகிறது.
- 2036 ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான வலுவான போட்டியாளர்களாக நாம் முன்னேறி வருகிறோம். மேலும் 2030–ல் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளையும் இந்தியா நடத்தவிருக்கிறது.
- ஒலிம்பிக்கின் 325 முதல் 350 போட்டிப் பிரிவுகளில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு பிரிவுகளில் இந்தியா பங்கேற்பதே இல்லை. இந்தப் பிரிவுகளில் இந்தியா கவனம் செலுத்த வேண்டும். இதற்காக நாம் ஒரு திறமையாளர் தேடல் இயக்கத்தைத் தொடங்க இருக்கிறோம்.
- 2036–ம் ஆண்டுக்கு நமக்கு விளையாட்டு வீரர்கள் தேவைப்படும் நிலையில், 5 முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே உள்ள விளையாட்டுத் திறமையைக் கண்டறிவதற்காக, நாடு முழுவதும் உள்ள கிராமங்கள், நகரங்கள், பள்ளிகளில் திறமை தேடல் இயக்கம் நடத்தப்படும்.
- போதைப்பொருள் பயன்பாடு ஒரு பெரும் நெருக்கடியாக மாறி வருகிறது. போதைப் பொருளற்ற இந்தியா என்பது நம் அனைவரின் கூட்டுப் பொறுப்பாக இருக்க வேண்டும்.
- நாட்டின் சமூக, கலாச்சார அமைப்புகளும் ஆன்மீகத் தலைவர்களும் ஒன்றிணைந்து, போதைப்பொருள் இல்லாத இந்தியாவிற்கான 100 வார கால இயக்கத்தைத் தொடங்க முன்வந்துள்ளனர். ஒவ்வொரு குடும்பமும் இந்த இயக்கத்தில் பங்கேற்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.



**"குருஷேத்திரப் போரின்போது, அர்ஜுனன் போர்க்களத்தில் ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஏராளமான கேள்விகளைக் கேட்டபோது, ஒரு செயலின் விளைவானது ஒருவரின் மனநிலையைப் பொறுத்தே அமையும் என்று கிருஷ்ணர் அவரிடம் கூறினார்."**

*(2017 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*

2017 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

# நக்சல்வாதத்தின் முடிவு
# 'நக்சல் மனநிலை' கொண்டவர்களால் ஏற்படும் புதிய சவால்

*நாற்பது ஆண்டு கால நக்சல்வாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததில் கிடைத்த வெற்றி குறித்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, 'நக்சல் மனநிலை கொண்டவர்களை' அடையாளம் கண்டு தனிமைப்படுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்...*

- நக்சலிசமும் மாவோயிசமும் லட்சக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலத்தை அழித்துவிட்டன. கடந்த நாற்பது ஆண்டுகளாக, சாதாரண மக்களைப் பாதுகாக்கும் பணியில் 3,500–க்கும் அதிகமான காவல்துறையினரும் பாதுகாப்புப் படையினரும் வீரமரணம் அடைந்துள்ளனர்.
- 2014–ம் ஆண்டில் மக்களுக்கு சேவையாற்றும் வாய்ப்புக் கிடைத்தபோது, அன்றே நாட்டை நக்சல்வாதத்திலிருந்து விடுவிக்க நாங்கள் உறுதி எடுத்தோம். இன்றோ, நக்சலைட்–மாவோயிச வன்முறை தனது இறுதி மூச்சை விடுவதற்குக் கூட வலிமையற்றதாக இருக்கிறது.
- ஒரு காலத்தில் நக்சலைட்டுகள் துப்பாக்கிகளால் சுட்ட இடங்களில், நிலம் ரத்தக் கறை படிந்திருந்த பகுதிகளில், இப்போது, அதே நக்சல் பாதிப்புக்குள்ளான பகுதிகளில், நக்சல்வாதத்திலிருந்து விடுதலை பெற்றதன் காரணமாக, வளர்ச்சி, நம்பிக்கை, முயற்சி ஆகியவற்றின் மூவண்ணக் கொடி உயரமாகப் பறக்கிறது.
- ஆயுதம் ஏந்திய நக்சல்களை காடுகளிலிருந்து ஒழிப்பதிலும், நாட்டை அந்த அச்சுறுத்தலில் இருந்து விடுவிப்பதிலும் வெற்றி பெற்றுள்ளோம். இருப்பினும், ஆயுதம் ஏந்திய நக்சல்கள் சென்றுவிட்ட போதிலும், மனதளவில் நக்சல் சிந்தனை கொண்டவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு வாய்ப்புக்காகக் காத்திருக்கிறார்கள்.
- அவர்கள் வன்முறை, அராஜகம் ஆகியவற்றுக்கான வழிகளைத் தேடுகிறார்கள். சமூகத்தைத் தவறான பாதைக்கு இழுத்துச் செல்ல பல்வேறு தந்திரங்களைக் கையாளுகிறார்கள். இந்த நக்சல் மனநிலை கொண்டவர்களை நாம் அடையாளம் கண்டு அவர்களைத் தனிமைப்படுத்த வேண்டும். ஒரு வளர்ச்சியடைந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான முதன்மையான முயற்சியுடன் நாட்டின் இளைஞர்கள் ஒன்றிணைய வேண்டும்.
- இந்தச் சவாலை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. நாம் இன்னும் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பல ஆண்டுகளாக, மாவோயிச சித்தாந்தம் கொண்ட தனிநபர்கள் அதிகார மையங்களில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து, கொள்கைகளில் செல்வாக்கு செலுத்தியும் வந்தனர்.

**"நாடு பல சவால்களை எதிர்கொள்கிறது என்பது உண்மைதான். ஆனால் இந்தச் சவால்களுக்கு இடையிலும், தேசம் மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்த வலிமையை நாம் பயன்படுத்தும்போது, தீர்வுகளுக்கான வழிகளைக் காண்கிறோம்."**

*(2016 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*



2016 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

## பாதுகாப்பான, திறன்மிக்க

# இந்தியாவின் பாதுகாப்புப் புரட்சி

*போரின் மாறிவரும் தன்மைக்கு இடையில், பிரதமர் நரேந்திர மோடி, சுதர்ஷன் சக்ரா திட்டம், பாதுகாப்பு ஏற்றுமதிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆகியவற்றுடன், மக்களின் பாதுகாப்புக்கான அம்சங்களை நவீனமயமாக்குவதாகவும் அறிவித்தார்.*

- இப்போது போரின் தன்மை மாறி வருகிறது. மோதல்கள் எல்லைகளுக்குள் மட்டுமே அடங்கிவிடும் என்பதற்கு இனி உத்தரவாதம் இல்லை. நவீனப் போரானது சுத்திகரிப்பு நிலையங்கள், வங்கித் துறை அல்லது தரவு மையங்களைக் குறிவைக்கக்கூடும். உள்கட்டமைப்புகளும் தொழிற்சாலைகளும் அழிக்கப்படுகின்றன.
- வரும் நாட்களில், நாம் ஒரு தீவிரமான மக்கள் பாதுகாப்புக் கட்டமைப்பை உருவாக்குவோம் என்றும், நவீன அமைப்புகளை மக்களுக்கு அறிமுகப்படுத்துவோம் என்றும் செங்கோட்டையிலிருந்து இப்போது நான் அறிவிக்கிறேன்.
- நவீன நெருக்கடிகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும், நவீன சவால்களை எதிர்கொள்ளவும், நாம் ஒரு மாபெரும் தன்னார்வ மக்கள் பாதுகாப்புப் படையை உருவாக்கப் போகிறோம்.
- பாதுகாப்பில் தற்சார்புடன் இருப்பதற்கு மாற்று இல்லை. நாம் அடுத்த தலைமுறை பாதுகாப்புத் தொழில்நுட்பங்களை உருவாக்கி, உலகத்துக்கு அதை வழங்கும் நாடாக மாற வேண்டும்.
- நாம் ட்ரோன்களையும், ட்ரோன் எதிர்ப்பு அமைப்புகளையும் உருவாக்கி, அதிவேகப் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களில் தலைமை வகிக்க வேண்டும். இணையப் பாதுகாப்பும் இப்போது ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு கவலையாக மாறி வருகிறது. இதிலும் நாம் நமது இளைஞர்களின் திறன்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.
- சில ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் சுதர்ஷன் சக்ரா திட்டத்தை அறிவித்தோம். அதன் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. நமது பாதுகாப்பு ஏற்றுமதி கிட்டத்தட்ட 50 மடங்கு அதிகரித்துள்ளது. மேலும் நமது ஆயுதங்கள் சுமார் 100 நாடுகளைச் சென்றடைகின்றன. உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு படிப்படியாக உயர்ந்து வருகிறது.



2015 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

**“ஜனநாயகத்தில் மக்கள் பங்கேற்பே மிகப்பெரிய சொத்து. 125 கோடி மக்களின் பங்களிப்புடன் நாம் தேசத்தை வழிநடத்தினால், நாடு ஒவ்வொரு கணமும் 125 கோடி அடிகள் முன்னேறும். அதனால்தான் ‘ஒரே குழுவாக செயல்படும் இந்தியா’ (டீம் இந்தியா) என்ற கருத்தின் மூலம் மக்கள் பங்கேற்பு வலியுறுத்தப்படுகிறது.”**

*(2015 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*

## மகளிர் சக்தி, சமூகப் பாதுகாப்பு,

# மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆகியவற்றில் பங்கேற்பதற்கான அழைப்பு

*மகள்களின் சாதனைகள் முதல் மக்களவையிலும், மாநில சட்டப்பேரவைகளிலும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பங்கேற்பு ஆகியவை வரை, தேசத்தைக் கட்டமைப்பதில் ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பும் அவசியம் என பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்...*

- போர் விமானங்கள், சிவில் விமானப் போக்குவரத்து, அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் ஆகியவை அடங்கிய ஸ்டெம் (STEM) கல்வி அல்லது ஆயுதப் படைகள் என எதுவாக இருந்தாலும், நமது மகள்கள் முன்னணியில் இருக்கிறார்கள்.
- நான் அண்மையில் சனந்தில் உள்ள ஒரு செமிகண்டக்டர் ஆலைக்குச் சென்றிருந்தேன். அங்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்த பழங்குடியினப் பெண்கள் பணிபுரிந்து கொண்டிருந்தனர்.
- பாஸ்போர்ட் (கடவுச்சீட்டு) என்றால் என்னவென்றே தெரியாத கிராமங்களிலிருந்து வந்த அந்தப் பெண்கள், வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சி பெற்று, இன்று சிப் தயாரிப்புத் துறையில் பணிபுரிந்து வருகின்றனர்.
- நாம் 3 கோடி சகோதரிகளை லட்சாதிபதி சகோதரிகளாக மாற்ற வேண்டும் என இலக்கு நிர்ணயித்து, அதை ஏற்கெனவே எட்டிவிட்டோம். இப்போது 6 கோடியை நோக்கி நகர்கிறோம்.
- நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்ட மசோதாவை நிறைவேற்றினோம். நமது தாய்மார்களும் சகோதரிகளும் நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் 33 சதவீத பிரதிநிதித்துவத்தைப் பெற வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.
- 2014-ம் ஆண்டுக்கு முன்பு, 25 கோடி மக்கள் மட்டுமே சமூகப் பாதுகாப்பைப் பெற்றிருந்தனர். பத்து ஆண்டுகளுக்குள், நாம் 100 கோடி மக்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்கியுள்ளோம்.
- ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கும் 5 லட்சம் ரூபாய் வரையிலான மருத்துவ சிகிச்சை இலவசமாக வழங்கப்படுகிறது. இதன் காரணமாக, நாட்டில் உள்ள குடும்பங்களுக்கு மொத்தம் 2 லட்சம் கோடி ரூபாய் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.
- செங்கோட்டையிலிருந்து நான் ஐந்து தீர்மானங்கள் (பஞ்ச பிராண்) பற்றிப் பேசினேன். இந்த ஐந்து தீர்மானங்களும், தேசம் தன்மானத்துடன் முன்னேறுவதற்கும், அதன் இலக்குகளைத் தாண்டிச் செல்வதற்குமான அளவற்ற வலிமையையும் திறனையும் அளித்துள்ளன. நாம் ஒவ்வொரு கணமும் அடிமை மனப்பான்மையை வேரறுத்துக் கொண்டே இருக்க வேண்டும்.
- நமது நலனை விட தேச நலனே முதன்மை பெற வேண்டும். கடமையே நமது அடையாளத்தை வரையறை செய்ய வேண்டும்.

**“எனதருமை நாட்டு மக்களே, என் வார்த்தைகளை நம்புங்கள். நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். கடந்த காலப் பாவங்களையும் அவற்றுடன் தொடர்புடைய பாதைகளையும் நாம் கைவிடுவோம். நல்லெண்ணம், சகோதரத்துவம் ஆகியவற்றின் பாதையைத் தழுவி, தேசத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லத் தீர்மானிப்போம். இதை நம்மால் சாதிக்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.”**

*(2014 சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி)*



2014 சுதந்திர தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம்

## பிரிவினை கொடூரங்கள் நினைவு தினம்

# இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, அமைதி ஆகியவற்றைக் காக்க உறுதியான தீர்மானம்

***நாட்டின் பிரிவினையால் ஏற்பட்ட வலியை ஒருபோதும் மறக்க முடியாது. வெறுப்பு, வன்முறை ஆகியவற்றின் காரணமாக, லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். பலர் தங்கள் உயிரையும் இழந்தனர். அந்த மக்களின் போராட்டங்களையும் தியாகங்களையும் கௌரவிக்கும் விதமாக, ஆகஸ்ட் 14-ம் தேதியை 'பிரிவினை கொடூரங்கள் நினைவு தினம்' என்று அனுசரிக்க முடிவு செய்யப்பட்டது. இந்த நாள், பாகுபாடு, பகைமை, தீய எண்ணம் எனும் நச்சுகளை ஒழிக்க நம்மை ஊக்குவிப்பதோடு, மனிதநேயத்தையும் வலுப்படுத்துகிறது...***



**தேசம் பிரிவினையின் அதிர்ச்சியைத் தாங்கிக்கொண்டது**

இந்தியா 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் தேதி பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது. ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15-ம் தேதி கொண்டாடப்படும் சுதந்திர தினம், நாட்டிற்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் தரும் ஒரு தருணமாகும். இருப்பினும், சுதந்திரத்தின் இனிமையுடன், நாடு பிரிவினையின் துயரத்தையும் தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது.

புதிதாக சுதந்திரம் பெற்ற இந்தியா, பிரிவினையின் கொடூரமான வேதனையைத் தாங்கிக்கொண்டது. அது லட்சக்கணக்கான இந்தியர்கள் மீது நீடித்த துன்பத் தழும்புகளை ஏற்படுத்தியது. மனித வரலாற்றிலேயே மிகப்பெரிய இடப்பெயர்வுகளில் ஒன்றாக இந்தப் பிரிவினை விளங்குகிறது. இது ஏறத்தாழ 2 கோடி மக்களைப் பாதித்தது. லட்சக்கணக்கான குடும்பங்கள் தங்கள் மூதாதையர்களின் கிராமங்கள், நகரங்கள் அல்லது மாநகரங்களை விட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டு, அகதிகளாகப் புதிய வாழ்க்கையைத் தொடங்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகினர்.



## நாட்டு மக்கள் அனைவருக்கும் மனமார்ந்த வணக்கங்கள்: பிரதமர் நரேந்திர மோடி

நாம் 'பிரிவினையின் கொடூரங்கள் நினைவு தினத்தை' அனுசரிப்பதைப் பிரதமர் நரேந்திர மோடி சுட்டிக் காட்டினார். பிரிவினையால் பாதிக்கப்பட்ட அனைவரின் துணிச்சலையும் நாம் போற்றுகிறோம். வரலாற்றின் அந்தத் தருணம் எண்ணற்ற மக்களின் வாழ்க்கையைச் சிதைத்தது. குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. தங்கள் அன்புக்குரியவர்களை பலர் இழந்தனர், மக்கள் தாங்க முடியாத துன்பத்தை அனுபவித்தனர். இருப்பினும், இவை அனைத்தையும் கடந்து, மக்கள் தங்கள் வாழ்க்கையை புதிதாகக் கட்டியெழுப்பி, இடர்பாடுகளை வெற்றியாக மாற்றி, தேசத்தின் முன்னேற்றத்திற்கு விலைமதிப்பற்ற பங்களிப்புகளை வழங்கினர். அவர்களின் பயணங்கள், விடாமுயற்சி ஆகியவற்றுடன் நிலைத்து நிற்கக் கூடிய மனித மனதின் சக்தியை நமக்கு நினைவூட்டுகின்றன. இந்த நாள், நம் நாட்டில் நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் நிலைநிறுத்துவதற்கான நமது உறுதியை மேலும் வலுப்படுத்தும் என்று நம்புகிறோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து, வளர்ச்சியடைந்த இந்தியாவைக் கட்டியெழுப்ப உழைப்போம். பிரிவினையின் கொடூரங்கள் நினைவு தினத்தில், அந்தக் கொடூரமான காலகட்டத்திலிருந்து மீண்டு வந்து, தேசத்தின் முன்னேற்றத்திற்கு அளப்பரிய பங்களிப்பைச் செய்த அனைத்து சக மக்களுக்கும் என் மனமார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாதகமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போதும் துணிச்சல், மனவுறுதி ஆகியவற்றின் மூலம், ஒருவர் தனது தீர்மானத்தை எவ்வாறு அடைய முடியும் என்பதை அவர்கள் நிரூபித்துள்ளனர். நல்லிணக்கம், ஒற்றுமை ஆகியவற்றின் தேசிய உணர்வை நாம் மேலும் வலுப்படுத்துவோம்.



### 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்பதே நமது உச்சபட்ச இலக்காக இருக்க வேண்டும்: அமித் ஷா

1947 ஆகஸ்ட் 14, வரலாற்றின் மிகக் கொடூரமான அத்தியாயங்களில் ஒன்றிற்குச் சாட்சியாக விளங்குகிறது என்றும், அந்நாளில் லட்சக்கணக்கான மக்கள் மனிதாபிமானமற்ற துன்பங்களை அனுபவித்துத் தங்கள் உயிரை இழந்தனர் என்றும், மத்திய உள்துறை அமைச்சரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான அமித் ஷா கூறினார். கோடிக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகள், சொத்துக்கள், அன்புக்குரியவர்களை விட்டுப் பிரிந்து, இடம்பெயரவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். நாட்டின் பிரிவினையால் ஏற்பட்ட வேதனையை வரலாறு ஒருபோதும் மறக்காது. இந்தத் துயரச் சம்பவத்தில் தங்கள் உயிரை இழந்த அனைவருக்கும், அடக்குமுறைக்கு எதிராகப் போராடியவர்களுக்கும் நான் மரியாதையுடன் அஞ்சலி செலுத்துகிறேன். பிரிவினைக் கொடூரங்கள் நினைவு தினத்தை அனுசரிப்பதன் மூலம், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு, இந்தத் துயரச் சம்பவத்தின் நினைவுகளை இளைய தலைமுறைக்கு எடுத்துரைக்கிறது. நாட்டை மீண்டும் பிளவுபடுத்த முயலும் சக்திகள் ஒருபோதும் வெற்றிபெற முடியாது என்பதையும், 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்பதே நமது தலையாய நோக்கமாக நிலைத்திருக்கும் என்பதையும் இது உறுதி செய்கிறது.



### வலிமையான, நல்லிணக்கத்துடன் கூடிய, உணர்வுபூர்வமான இந்தியாவை உருவாக்குவது நமது பொறுப்பு : ராஜ்நாத் சிங்

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், 'பிரிவினைக் கொடூரங்கள் நினைவு தினம், லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்க்கையை ஆழ்ந்த துயரம், இடப்பெயர்வு, நிச்சயமற்ற நிலை ஆகியவற்றை நோக்கித் தள்ளிய இந்தியப் பிரிவினையின் துயரத்தை நமக்கு நினைவூட்டுவதாக தெரிவித்தார். இது வரலாற்றின் ஒரு வேதனையான அத்தியாயம் மட்டுமல்ல. தங்கள் வீடுகள், குடும்பங்கள், சொத்துகள், அன்புக்குரியவர்கள் ஆகிய அனைத்தையும் இழந்த போதிலும், தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பத் தீர்மானித்த எண்ணற்ற தனிநபர்களின் போராட்டம், துணிச்சல், தியாகம், மீள்திறன் ஆகியவற்றுக்கான சான்றாகவும் விளங்குகிறது. வரலாற்றுத் துயரங்களின் நினைவுகளை மனதில் நிலைநிறுத்துவது மட்டும் போதாது என்பதை இந்த நாள் நமக்கு நினைவூட்டுகிறது. அவற்றிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, எந்தவொரு சமூகமும் மீண்டும் பிரிவினையின் வேதனையை அனுபவிக்காத ஒரு வலிமையான, நல்லிணக்கமான, உணர்வுபூர்வமான இந்தியாவைக் கட்டியெழுப்புவது நமது பொறுப்பாகும். பிரிவினையின் கொடூரங்களின் போது தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த அறியப்பட்ட, அறியப்படாத அனைத்து தனிநபர்களுக்கும், தங்கள் தாய்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்த எண்ணற்ற குடும்பங்களுக்கும் எனது பணிவான மரியாதையைச் செலுத்துகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.






# தொழிற்புரட்சியின் ஒரு புதிய பாய்ச்சல்

## சாதகமான சூழலால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது

வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு மட்டுமல்லாமல், ஒரு விரிவான தொழில்துறை சூழலமைப்பும், சாதகமான சூழலும் தேவை. ஆந்திரப் பிரதேசத்தில் அத்தகைய சூழல் உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாகவே பல பெரிய, உலகளாவிய நிறுவனங்கள் இந்த மாநிலத்தில் முதலீடு செய்ய ஆர்வமாக உள்ளன. வளர்ச்சிக்கான இந்த உத்வேகத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி, ஆந்திரப் பிரதேசத்தில் 17,900 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்துப் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.



பிரதமர் நரேந்திர மோடியால் அல்லூரி சீதாராம ராஜு விமான நிலையம் திறந்து வைக்கப்பட்ட நிகழ்ச்சியை முழுமையாகக் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

ஆந்திரப் பிரதேசத்தின் தொழில்துறையில் ஏற்படும் ஒரு பெரும் மாற்றம் குறித்து தொலைநோக்குப் பார்வையுடன் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, மென்பொருள் துறையில் மாநிலம் பெற்றுள்ள வலுவான அடையாளத்துடன், அது ஒரு வலிமையான உற்பத்தி மையமாகவும் பரிணமிக்கும் என்று கூறினார். இது எதிர்காலத்தில் வேலைவாய்ப்புக்கும் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களுக்கும் ஒரு புதிய உத்வேகத்தை உருவாக்கும். 'பொன்னான ஆந்திரப் பிரதேசம்' என்ற தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்லும் வகையில், பிரதமர் 2026 ஆகஸ்ட் 1-ம் தேதி விஜயநகரம் மாவட்டம், போகபுரத்தில் 17,900 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்துப், புதிய திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்.

புகழ்பெற்ற பழங்குடியின சமூகத் தலைவர் அல்லூரி சீதாராம ராஜுவுக்கு அஞ்சலி செலுத்திய பிரதமர் நரேந்திர மோடி, இந்தப் புனித மண்ணில் தொடங்கப்பட்டுள்ள புதிய விமான நிலையம், பிராந்திய வளர்ச்சிக்கு ஒரு முக்கிய உந்துசக்தியாகவும், இளைஞர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு ஒரு சக்திவாய்ந்த தளமாகவும் அமையும் என்று குறிப்பிட்டார். புதிய விமான நிலையத்திற்கு மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் அல்லூரி சீதாராம ராஜுவின் பெயரைச் சூட்டுவதற்கான அரசின் அதிகாரப்பூர்வ முடிவைப் பிரதமர் அறிவித்தார். இந்த மறக்க முடியாத அஞ்சலியானது, இந்த விமான நிலையம் வழியாகச் செல்லும் ஒவ்வொரு பயணியின் மனதிலும் ஆழ்ந்த தேசபக்தியை ஏற்படுத்தும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். ●

## ஆந்திரப் பிரதேசத்தின் வளர்ச்சி குறித்துப் பிரதமர் நரேந்திர மோடி கூறிய கருத்துகளின் முக்கிய அம்சங்கள்

- சுமார் 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே திட்டப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.
- முழு ரயில் கட்டமைப்பும் மின்மயமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் 70-க்கும் அதிகமான ரயில் நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன.
- மென்பொருள், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் மாநில இளைஞர்கள் பெற்றுள்ள உலகளாவிய அங்கீகாரத்தைப் பிரதமர் பாராட்டினார்.
- இளம் திறமையாளர்களுக்கு உள்நாட்டிலேயே வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், அவர்களை உகந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.
- அரசின் கவனம் தற்போது முதன்மையாக, செமிகண்டக்டர் போன்ற தொலைநோக்குடன் கூடிய, தொழில்நுட்பத்தைச் சார்ந்த தொழில்துறைகள் மீது உள்ளது.
- 15 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஒரு பிரமாண்டமான வளாகத்தை அமைக்கும் கூகுள் நிறுவனத்தின் அறிவிப்பை சுட்டிக்காட்டிய பிரதமர், இது இந்த மாநிலத்தின் மீது உலகளாவிய முதலீட்டாளர்களிடையே அதிகரித்து வரும் ஆர்வத்தின் தெளிவான வெளிப்பாடு என்று குறிப்பிட்டார்.
- பல உலகளாவிய நிறுவனங்கள் இங்கு புதிய வாய்ப்புகளைக் காண்கின்றன. இது மாநில இளைஞர்களுக்கும், ஒட்டுமொத்த நாட்டின் இளைஞர்களுக்கும் பெரிதும் பயனளிக்கும்.
- நக்கப்பள்ளியில் ஒரு பிரமாண்டமான மருந்துத் தொழில்துறைப் பூங்காவை அமைப்பதற்கு மத்திய அரசு ஆதரவு அளித்து வருகிறது.
- ராயலசீமா பகுதியில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் 5 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.
- பிரதமர் நரேந்திர மோடியின் கடந்த மூன்று பயணங்களின்போது மட்டும் இந்த மாநிலத்தில் 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**'உடான்' திட்டத்தின் இரண்டாம் கட்டம், 29,000 கோடி ரூபாய் என்ற மிகப்பெரிய முதலீட்டில் அண்மையில் தொடங்கப்பட்டது.**

**செயல்பாட்டில் உள்ள விமான நிலையங்கள்**






"இப்போது, நாடு கடல்சார் பொருளாதாரத்தைத் (நீலப் பொருளாதாரம்) தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. இந்தப் பகுதி முழுவதையும் ஒரு கடலோரப் பொருளாதார வழித்தடமாக மேம்படுத்துவதே எங்களின் தொலைநோக்குப் பார்வை. இந்த இலக்கை மனதில் கொண்டு, விசாகப்பட்டினம் முதல் கிருஷ்ணபட்டினம் வரை உள்ள தற்போதைய துறைமுகங்கள் நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன. மேலும், நாங்கள் முலபேட்டாவிலும் ராமாயப்பட்டினத்திலும் புதிய துறைமுகங்களைக் கட்டமைத்து வருகிறோம்."

பிரதமர் நரேந்திர மோடி

# இந்திய இளைஞர்கள் உலகளாவிய முன்னேற்றத்தை வழிநடத்துகின்றனர்

***பிரதமர் நரேந்திர மோடி, கர்நாடகாவின் மைசூருவில் 'சுவாமி விவேகானந்தர் கலாச்சார இளைஞர் மையம் – விவேகானந்தர் நினைவு இல்லத்தைத் (விவேகா ஸ்மரக்)' திறந்து வைத்தார். சுவாமி விவேகானந்தரை இந்தியாவின் மனசாட்சி என்று வர்ணித்த அவர், இந்த நிகழ்வில் பேசுகையில், நாட்டின் இளைஞர்கள் இப்போது உலகளாவிய வளர்ச்சிக்குப் புதிய உத்வேகத்தை அளித்து வருகின்றனர் என்று குறிப்பிட்டார். சுவாமி விவேகானந்தரின் கனவுகளின் அடிப்படையில் இந்தியாவைக் கட்டமைப்பது தற்போதைய தலைமுறையின் முக்கியப் பொறுப்பாகும்...***

ராமகிருஷ்ண மிஷனின் போதனைகளுடன் தமக்குள்ள ஆழமான ஆன்மீகத் தொடர்பைப் பற்றிப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, தமது இளமைக் காலம் முதல் தற்போதைய பொறுப்புகள் வரையிலான தமது தனிப்பட்ட பயணத்தில், அந்த அமைப்பு ஏற்படுத்திய பெரும் தாக்கத்தை நினைவு கூர்ந்தார். புதிதாகக் கட்டப்பட்ட சுவாமி விவேகானந்தர் கலாச்சார இளைஞர் மையம் – விவேகானந்தர் நினைவு இல்லத்தின் (விவேக ஸ்மராக்) பாரம்பரியம் குறித்துப் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்தார். அந்த மாபெரும் துறவியையும், குவெம்பு போன்ற உள்ளூர் அறிஞர்களையும், நகரத்தின் அறிவுசார் பாரம்பரியத்தையும் இணைக்கும் ஆழ்ந்த வரலாற்றுத் தொடர்புகளுக்கு அவர் மரியாதை செலுத்தினார்.

130 ஆண்டுகளுக்கு முன்பு, அப்போதைய மைசூர் மகாராஜா, அங்கும் இங்கும் சுற்றித் திரிந்த ஒரு இளம் துறவியை அடையாளம் கண்டு அவருக்கு உதவியதை பிரதமர் நரேந்திர மோடி நினைவு கூர்ந்தார். அது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஆதரவாகும். அதனைப் பின்னர் சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்து மிகுந்த நன்றியுடன் நினைவு கூர்ந்தார். பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில், "பிறருக்காக வாழ்பவரே உண்மையான நோக்கத்துடன் வாழ்கிறார். இந்த மந்திரத்தின் வழிகாட்டுதலின்படியே, இந்த ஆசிரமம், நூறு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது" என்று குறிப்பிட்டார்.

சுவாமி விவேகானந்தரின் காலத்தில் இந்திய இளைஞர்கள் அடிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையையும், இப்போது அவர்கள் உலக அளவில் பெற்றுள்ள செல்வாக்கையும் ஒப்பிட்டுப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, இளைஞர்களின் கல்வியை தேச நிர்மாணத்தின் முக்கிய அம்சமாக விவேகானந்தர் கருதியதை எடுத்துரைத்தார். ஒரு காலத்தில் அடிமைத்தனத்தின் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்த இந்திய இளைஞர்கள், தற்போது முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகளாவிய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்கின்றனர். நாட்டை உலகின் அதிவேகமாக வளரும் பொருளாதாரமாகவும், மூன்றாவது பெரிய புத்தொழில் சூழலமைப்பாகவும், இரண்டாவது பெரிய கைப்பேசி (மொபைல் போன்) உற்பத்தி மையமாகவும் மாற்றிய பெருமை இளைஞர்களையே சாரும். இப்போது, தனது இளைஞர்களின் மகத்தான ஆற்றலால் உந்தப்பட்டு, இந்தியா செயற்கை நுண்ணறிவு, ஆழ் தொழில்நுட்பம், விண்வெளித் தொழில்நுட்பம், புத்தாக்கம் ஆகியவற்றில் வெற்றியின் புதிய, பொன்னான அத்தியாயங்களை எழுதி வருகிறது. தற்சார்பு இந்தியா இயக்கமாக இருந்தாலும் சரி, இந்தியாவில் தயாரிப்போம் திட்டமாக இருந்தாலும் சரி, அவற்றின் வெற்றிக்குப் பின்னால் உள்ள உண்மையான உந்துசக்தி இந்திய இளைஞர்களின் சக்தியே ஆகும்.



**"சுவாமி விவேகானந்தர் கண்ட கனவின் அடிப்படையில் இந்தியாவை உருவாக்கி அவரது கனவை நனவாக்கும் பொறுப்பு தற்போதைய தலைமுறையினரிடமே உள்ளது."**

**பிரதமர் நரேந்திர மோடி**

**இளைஞர்களுக்கான நடவடிக்கைகள் : பிரதமர் நரேந்திர மோடி குறிப்பட்ட சிறப்பு அம்சங்கள்..**

- 14,000–க்கும் அதிகமான பிரதமரின் ஸ்ரீ பள்ளிகள்
- 10,000–க்கும் அதிகமான அடல் சிந்தனை ஆய்வகங்கள்
- ஐஐஎம், ஐஐடி–களின் எண்ணிக்கை அதிகரிப்பு
- எம்பிபிஎஸ் மருத்துவப் படிப்புக்கான இடங்கள் சுமார் 1.40 லட்சத்தை எட்டியுள்ளன



மத்திய அமைச்சரவை முடிவுகள்

# குவஹாத்தி – தேஜ்பூர் நெடுஞ்சாலை, கோபர்தன் திட்டத்திற்கு ஒப்புதல்

*மத்திய அமைச்சரவையின் முடிவுகள் வடகிழக்குப் பிராந்தியத்தில் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்தவும், நாட்டின் உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும், அசாமில் 135.87 கி.மீ தொலைவிலான குவஹாத்தி – தேஜ்பூர் நான்கு வழித்தடத்தை மேம்படுத்தவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், இந்தியாவில் எரிசக்தித் துறையை வலுப்படுத்தவும் உயிரி எரிவாயு உற்பத்தியை அதிகரிக்கவும் 'கோபர்தன்' திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு முடிவுகளும் வடகிழக்குப் பிராந்தியத்தில் போக்குவரத்து இணைப்பை விரைவுபடுத்துவதுடன், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தவும் உதவும்.*

**முடிவு:** 23,731 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அழுத்தப்பட்ட உயிரி எரிவாயுவிற்கான தேசிய ஒருங்கிணைந்தத் திட்டமான 'கோபர்தன்' திட்டத்திற்கு ஒப்புதல்.

**தாக்கம்:** நாட்டின் கரிம வளங்களை தூய்மை எரிசக்தி, கிராமப்புற வளம், பொருளாதார வளர்ச்சியாக மாற்றியமைக்கும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தேசியத் திட்டம். இத்திட்டம் 2026–27–ம் ஆண்டு முதல் 2035–36–ம் ஆண்டு வரையிலான நிதியாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

- உறுதியளிக்கப்பட்ட கொள்முதல், நிலையான விலை நிர்ணயம், மூலதன ஆதரவு, குழாய் வழி இணைப்பு ஆகியவற்றின் மூலம் அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஒருங்கிணைந்த கட்டமைப்பு.
- உள்நாட்டில் அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு உற்பத்தியை ஏறக்குறைய பத்து மடங்கு அதிகரித்தல், நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துதல்.
- விவசாயிகள், கிராமப்புற தொழில்முனைவோர்கள், தனியார் முதலீடு, 'கழிவிலிருந்து செல்வம்' முயற்சிகள், 'தற்சார்பு இந்தியா' ஆகியவற்றிற்குப் பெரும் ஊக்கமளிக்கிறது.

**முடிவு: அசாமின் குவஹாத்திக்கு அருகிலுள்ள பைஹாட்டா சாரியாலியிலிருந்து தேஜ்பூர் வரை, தேசிய நெடுஞ்சாலை–15–ஐ ஒட்டி 4 வழிச் சாலை அமைப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது; இதில் 15.11 கி.மீ தொலைவிலான மங்கல்தாய் புறவழிச்சாலை சேர்க்கப்படவில்லை.**

**தாக்கம்:** இத்திட்டம் சராசரி பயண வேகத்தை இருமடங்காக்கவும், பயண நேரத்தை பாதியாகக் குறைக்கவும், ஒட்டுமொத்த சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தவும் உதவும். இது எரிபொருள் நுகர்வு, வாகன இயக்கச் செலவுகளைக் குறைப்பதோடு, பிராந்திய அளவிலான போக்குவரத்து வசதியையும் சமூக – பொருளாதார வளர்ச்சியையும் ஊக்குவிக்கும்.

- இத்திட்டத்தில் 15 பெரிய பாலங்கள், 30 சிறிய பாலங்கள், 19 மேம்பாலங்கள், தேஜ்பூர் புறவழிச்சாலையில் யானைகள் கடந்து செல்வதற்கான ஒரு சுரங்கப்பாதை ஆகியவற்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் அடங்கும்.
- 8,970.20 கோடி ரூபாய் செலவில் 135.87 கி.மீ தொலைவிலான நெடுஞ்சாலை அமைக்கப்படும்.
- தேஜ்பூர் புறவழிச்சாலையில் 4.9 கி.மீ தொலைவிலான அவசரக்கால விமானத் தரையிறக்க வசதி உருவாக்கப்படும்.
- இது அசாம், அருணாச்சல பிரதேசத்தில் உள்ள முக்கிய சமூக, பொருளாதார, சரக்கு போக்குவரத்து மையங்களை தடையின்றி இணைக்கும்.

*மத்திய அமைச்சரவை முடிவுகள் குறித்த செய்தியாளர்கள் சந்திப்பை காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.*




# ‘இளைஞர்களின்’ நலன் கருதி ஒவ்வொரு முடிவும் மேற்கொள்ளப்பட்டது

*தற்போது நாடும் உலகமும் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களைக் கருத்தில் கொண்டு, நமது உறுதியும் வலுவடைந்துள்ளது. இளைஞர்கள் தங்களுடைய வாழ்வின் அடுத்த 30–35 ஆண்டுகளில் மேற்கொள்ளும் செயல்பாடுகளே 'வளர்ச்சியடைந்த இந்தியா'–வை நோக்கியப் பயணத்தை வடிவமைக்கும். அதனால்தான், ஐஐடி தில்லியின் பட்டமளிப்பு விழாவில், தாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு முடிவிலும் நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய நன்மையே அடிப்படையாக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்யுமாறு பிரதமர் நரேந்திர மோடி மாணவர்களை வலியுறுத்தினார். தற்போது இந்தியா பொருளாதாரம், தொழில்நுட்பம், தொழில் துறைகளில் தன்னிறைவை அடைந்து வருகிறது; இந்த வலுவான அடித்தளத்தின் மீதே ஒரு மகத்தான, வளர்ச்சியடைந்த இந்தியா கட்டமைக்கப்பட வேண்டும்.*

வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய இந்தப் பயணத்தில் இளைஞர்களின் முக்கியப் பங்களிப்பைச் சுட்டிக்காட்டிய பிரதமர் மோடி, நாட்டின் வலிமையானது இளைஞர்களுக்கு அதிகாரமளித்தலுடன் நேரடியாகத் தொடர்புடையது என்று குறிப்பிட்டார். இந்த தொலைநோக்குப் பார்வையுடன், முன்பு இளைஞர்கள் அனுக முடியாமல் இருந்த பல்வேறு துறைகளில் அரசு இப்போது வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. அரசின் முற்போக்கான கொள்கைகளால், நாடு முழுவதும் உள்ள இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் உருவாகி வருகின்றன. ஐஐடி தில்லியின் 57–வது பட்டமளிப்பு விழாவில், சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு அப்பல்கலைக்கழகத்தின் மிகவும் மதிப்புமிக்க பட்டங்களை பிரதமர் மோடி வழங்கினார். மேலும், ஐஐடி தில்லியின் சோனிபட் வளாகத்தில் நிறுவப்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய சூப்பர் கம்ப்யூட்டிங் வசதியான 'பரம் பிரக்யா' –வையும் அவர் தொடங்கி வைத்தார்.

## பிரதமர் மோடி மாணவர்களுடன் நடைமுறைக்கேற்ற சில வாழ்க்கைப் பாடங்களைப் பகிர்ந்துகொண்டார்...

- கல்வி வளாக வாழ்க்கைக்கும், வளாகத்திற்கு வெளியான வாழ்க்கைக்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது. ஐஐடி தேர்வுகளுக்கு ஒரு குறிப்பிட்ட பாடத்திட்டம் உண்டு; ஆனால் வாழ்க்கைத் தேர்வில், அனைத்தும் 'பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்டவை' யாகவே அமைகின்றன.
- கல்வி வளாக வாழ்க்கையில், அனைத்துக் கோட்பாடுகளும் தெளிவாகவும், அனைத்தும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதாகவும் இருந்ததை நினைவுகூருங்கள். ஆனால், நிஜ வாழ்க்கையில், நிலையான பாடத்திட்டமோ அல்லது வரையறுக்கப்பட்ட வினாத்தாளோ இருப்பதில்லை. பெரும்பாலும், உண்மையான கேள்வி என்னவென்று கூட யாரும் உங்களிடம் சொல்லமாட்டார்கள்; அந்தக் கேள்வியை நீங்களே கண்டறிய வேண்டியிருக்கும்.
- ஒவ்வொரு தலைமுறையும் அந்தந்த காலத்திற்கேற்ற சவால்களை எதிர்கொள்கிறது. ஒவ்வொரு தலைமுறைக்கும் அதற்குரிய தேசியப் பொறுப்பும் உள்ளது. அடிமைத்தனத்தின் காலத்தை நமது நாடு எதிர்கொண்டபோது, அக்காலத் தலைமுறையின் ஒரே குறிக்கோளாக இந்தியாவின் சுதந்திரம் இருந்தது.
- பெரிய இலக்குகளை அடைய நாம் முற்படும்போது, ஒரு முக்கியமான கவனச்சிதறலை எதிர்கொள்கிறோம்: அதுவே நம்மை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் அம்சம். சமூக ஊடகங்கள் நிறைந்த தற்போதைய காலகட்டத்தில், இந்த ஒப்பீடு ஒருபோதும் முடிவதில்லை.
- நினைவில் கொள்ளுங்கள், வாழ்க்கை என்பது ஒரு தரவரிசைப் பட்டியல் அல்ல; உங்கள் உண்மையான போட்டி மற்றவர்களுடன் அல்ல, மாறாக உங்களுடன்தான். நேற்று இருந்ததை விட இன்று சிறந்தவராகத் திகழ முயற்சி செய்யுங்கள்.
- தற்போது, உலகின் உத்திசார்ந்த நடவடிக்கைகள் மிக விரைவாக மாறி வருகின்றன. உலகளாவிய அதிகாரச் சமநிலை ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணமான உந்துசக்தி தொழில்நுட்பம் ஆகும்.




கற்றுக்கொள்பவர்கள் வெற்றி பெறுவார்கள். புதிய சவால்களுக்குப் புதிய தீர்வுகளைக் காணும் துணிச்சல் கொண்டவர்களுக்கு, அந்தச் சவால்களே வாய்ப்புகளாக மாறும்.

> "வாழ்க்கையில் எப்போதும் ஆர்வமுடன் இருங்கள்; கற்றுக்கொள்ளும் உந்துதலை உயிர்ப்புடன் வைத்திருங்கள். எந்தவிதச் சிந்தனையுமின்றி ஏற்றுக்கொள்ளப்படும் அம்சங்களை உன்னிப்பாக ஆராயுங்கள். அவற்றைக் குறித்துக் கேள்வி எழுப்புங்கள். ஆனால், வெறும் கேள்விகள் கேட்பதோடு மட்டும் இருந்துவிடாதீர்கள்; அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறியும் துணிச்சலையும் கொண்டிருங்கள். இத்தகைய மனப்பான்மை உங்களுக்கென ஒரு தனித்துவமான அடையாளத்தை உருவாக்கும்.
>
> பிரதமர் நரேந்திர மோடி

செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல், மேம்பட்ட கணினித் தொழில்நுட்பம், பல்துறைச் சார்ந்த ஆராய்ச்சி ஆகிய துறைகளில் இந்த நிறுவனம் கொண்டுள்ள திறன்களை இப்புதிய வசதி கணிசமாக மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விண்வெளித் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து ஐஐடி தில்லியின் பட்டமளிப்பு விழாவில் காணொளி வாயிலாக, தான் ஆற்றிய முந்தைய உரையை நினைவுகூர்ந்த பிரதமர் மோடி, ஒரு காலத்தில் இத்துறை ஏறக்குறைய முழுமையாக அரசின் கட்டுப்பாட்டிலேயே இருந்ததைக் குறிப்பிட்டார். ஆனால் தற்போது, அதே விண்வெளித் துறை ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகளை வழங்கும் ஒரு களமாக மாறியுள்ளது. உலகளவில் மிகச் சில நாடுகள் மட்டுமே எட்டியுள்ள மைல்கற்களை எட்டும் வகையில், நமது இளைஞர்கள் தற்போது சுயமாக உருவாக்கிய ராக்கெட்டுகள் விண்ணில் செலுத்தப்பட்டு வருகின்றன.

*பிரதமர் மோடியின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.*




# யுபிஐ சேவைகள் கட்டணமின்றி தொடரும்...

*டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளை மேலும் வலுவானதாகவும் வெளிப்படையானதாகவும் மாற்றுவதற்கு மத்திய அரசு பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 'வரிவிதிப்பு, பிற சட்டங்கள் (திருத்த) மசோதா, 2026' நிறைவேற்றப்பட்டதன் மூலம், யுபிஐ தொடர்பான கட்டணங்களுக்கான நடைமுறைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. நுகர்வோர், தனிநபர்களுக்கு இடையிலான பணப் பரிவர்த்தனைகளுக்கு யுபிஐ சேவைகள் தொடர்ந்து முற்றிலும் கட்டணமின்றி இருக்கும். டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கான 'வணிகர் தள்ளுபடி விகிதம்' (எம்டிஆர்) என்பது வாடிக்கையாளர்களுக்கு அல்ல, மாறாக வணிகர்களுக்கே பொருந்தும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெளிவுபடுத்தினார். எம்டிஆர் கட்டணங்கள், உள்கட்டமைப்பு, பாதுகாப்பு வசதிகளில் கூடுதல் முதலீடுகளை மேற்கொள்ள வங்கிகளுக்கும் நிதிசார் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் உதவும்...*

நாடாளுமன்றம் 'வரிவிதிப்பு, பிற சட்டங்கள் (திருத்த) மசோதா, 2026'-ஐ நிறைவேற்றியுள்ளது. நாடாளுமன்றத்தில் பேசிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இந்தச் சட்டம் யுபிஐ பரிவர்த்தனைகள் மீது எந்தவொரு வரியையும் விதிக்கவில்லை என்றும், நுகர்வோருக்கு இந்த டிஜிட்டல் பணப்பரிமாற்றச் சேவை தொடர்ந்து கட்டணமின்றியே கிடைக்கும் என்றும் தெளிவுபடுத்தினார். யுபிஐ தொடர்பான இந்தத் திருத்தம் ஒரு அவசியமான விதிமுறை மட்டுமே என்றும், இது பயனர்கள் மீது எந்தவொரு வரியையோ அல்லது பரிவர்த்தனைக் கட்டணத்தையோ விதிக்கவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். யுபிஐ-ன் உள்ளடக்கிய வளர்ச்சிக்குச் சிறு வணிகர்கள் மிக அவசியமானவர்கள் என்பதால், அவர்கள் மீது எம்டிஆர் (வணிகர் தள்ளுபடிக் கட்டணம்) கட்டணத்தை விதிக்கும் எண்ணம் ஏதுமில்லை என்றும் அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

### யுபிஐ குறித்த முக்கிய தகவல்கள்...

- 2016-17-ல் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, ஒருங்கிணைந்த பணப்பரிமாற்ற நடைமுறை (யுபிஐ) இந்தியாவின் டிஜிட்டல் பொருளாதாரத்தை உலகின் மிகவும் உள்ளடக்கிய, துடிப்பான கட்டணச் செயல்முறைகளில் ஒன்றாக மாற்றியுள்ளது.
- யுபிஐ உலகின் மிக விரைவாக வளர்ந்து வரும் கட்டணச் செயல்முறையாகும்; 2026 ஜூலையில் மட்டும், 29.9 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 2,366 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன.
- யுபிஐ தற்போது 12 நாடுகளில் செயல்பாட்டில் உள்ளது. சர்வதேச அளவில் யுபிஐ-யை அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.




### மத்திய அரசின் தெளிவான அறிவிப்பு என்னவென்றால்...

- **பயனர்களுக்கு கட்டணம் கிடையாது:** பணம் செலுத்தும் வாடிக்கையாளர்களிடம் பரிவர்த்தனைகளுக்கு எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படாது.
- **கட்டணமின்றி பி2பி பரிவர்த்தனைகள்:** தனிநபர்களுக்கு இடையிலான (பி2பி) அனைத்துப் பரிவர்த்தனைகளும் தொடர்ந்து கட்டணமின்றியே இருக்கும்.
- **வணிகர்களுக்குக் குறைந்தபட்ச எம்டிஆர்:** எம்டிஆர் (வணிகர் தள்ளுபடி விகிதம்) கட்டணம் ஏதேனும் விதிக்கப்பட்டால், அது மிகக் குறைந்த விகிதத்தில்தான் இருக்கும் (பற்று அல்லது வரவு அட்டைகளுக்கான கட்டணத்தை விட இது குறைவாகவே இருக்கும்). மேலும், ஒரு குறிப்பிட்ட வரம்பைத் தாண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே இது பொருந்தும்.
- யுபிஐ மூலம் மேற்கொள்ளப்படும் பெரும்பாலான வர்த்தகம் சார்ந்த பரிவர்த்தனைகள் தொடர்ந்து கட்டணமின்றியே இருக்கும். சிறு கடைக்காரர்கள், மளிகைக் கடைகள் யுபிஐ மூலம் பணம் பெறுவதற்கு எம்டிஆர் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.
- 'பணம் செலுத்துதல், தீர்வு அமைப்புகள் சட்டம், 2007'-ன் பிரிவு 10ஏ-ல் திருத்தம் செய்ய முன்மொழியும் 'வரிவிதிப்பு, பிற சட்டங்கள் (திருத்த) மசோதா, 2026' நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, எம்டிஆர் கட்டணம் (பொருந்தினால்) குறித்த முடிவை என்பிசிஐ தலைமையிலான 'யுபிஐ, சேவைச் செயல்பாட்டுக் குழு' மேற்கொள்ளும்.

# வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தொலைநோக்குப் பார்வை
# ஆரோக்கியமான உடல்நலன், மன நலன்

*வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் இலக்கை அடைய, உடல் ரீதியாக ஆரோக்கியமான, மனதளவில் வலிமையான, தன்னம்பிக்கை மிக்க ஒரு இளம் தலைமுறை அவசியமாகும். அதனால்தான், பிரதமர் நரேந்திர மோடி ஆகஸ்ட் 2-ம் தேதியன்று 'வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான போதைப்பழக்கம் இல்லா இளைஞர்கள் உறுதிமொழி இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்...*

> ஒரு இளைஞர் அறியாமையால் போதைப் பழக்கத்திற்கு ஆளாகிவிட்டால், அதற்காக அவர்களுக்கான அனைத்து வழிகளும் அடைபட்டுவிட்டன என்று அர்த்தமல்ல! குடும்பத்தில் உள்ள ஒரு குழந்தை போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டால்... சமூக கௌரவம் என்ற பெயரில் அதை மறைக்காதீர்கள். தேவையான உதவிகளைப் பெறுங்கள். மருத்துவ உதவியின் மூலம் உங்கள் குழந்தையை அப்பழக்கத்திலிருந்து மீட்க முயற்சி செய்யுங்கள். அத்தகைய சூழலில் அவர்கள் சிக்கிக்கொள்வதற்கு முன்பே அவர்களின் கை பிடித்து வழிநடத்தும் வகையில், குடும்பத்திற்குள் குழந்தைகளுடன் வெளிப்படையாகப் பேசும் கலாச்சாரத்தை நாம் வளர்க்க வேண்டும்.
>
> **பிரதமர் நரேந்திர மோடி**



*பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.*

இந்த இயக்கம் தனிநபர் ஆரோக்கியத்துடன் மட்டுமின்றி, குடும்பம், சமூகம், ஒட்டுமொத்த நாட்டின் நலன்களையும் உள்ளடக்கியது. இதனால்தான் பிரதமர் நரேந்திர மோடி இந்த இயக்கத்தை ஒரு முக்கிய உறுதிப்பாடாகக் குறிப்பிட்டார்; மேலும், நாடு முழுவதும் 28,000-க்கும் மேற்பட்ட இடங்களில் இருந்து இணைந்திருந்த ஒரு கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்களிடம் அவர் உரையாற்றினார். 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை நோக்கி நாடு பயணிக்கும் வேளையில், நாட்டின் இளைஞர்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் ஆரோக்கியமாக இருப்பது அவசியம் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் மிகுந்த தன்னம்பிக்கையுடன் திகழ வேண்டும்; அதேவேளையில் போதைப்பொருள் பயன்பாடு போன்ற அழிவுப் பாதையை நோக்கிச் செல்லும் பழக்கவழக்கங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். "காசி பிரகடனத்தின்" கீழ், 125-க்கும் மேற்பட்ட ஆன்மீக அமைப்புகள், ஏராளமான தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஆதரவுடன், மக்கள் நலன் சார்ந்த இந்த முயற்சி தற்போது வெற்றிகரமாக ஒரு தேசியத் திட்டமாக உருவெடுத்துள்ளது," என்று பிரதமர் மோடி குறிப்பிட்டார். இந்த இயக்கத்திற்கான லட்சியமிக்க 100 வார கால செயல் திட்டத்தை விவரித்த பிரதமர், "வரவிருக்கும் 100 ஞாயிற்றுக்கிழமைகளும் போதைப்பொருள் இல்லாத இந்தியாவை நோக்கிய 100 வலுவான படிகளாக அமையும். போதைப் பழக்கத்திலிருந்து விலகி இருப்பது நாட்டின் எதிர்காலத்திற்கும், தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கைக்கும் மிக அவசியமாகும்," என்று கூறினார்.

## பிரதமர் மோடி உரையின் முக்கிய அம்சங்கள்...

- போதைப் பொருட்களால் கிடைக்கும் குறுகிய கால இன்பம், இறுதியில் ஒருவரின் தொழிலையும், குடும்ப வாழ்க்கையையும் சீரழித்துவிடுகிறது.
- எந்தச் சூழலிலும் போதைப் பொருள் பயன்பாட்டிற்குச் சமூக அங்கீகாரம் கிடைக்கக்கூடாது.
- போதைப் பழக்கத்திலிருந்து மீள்வதில் சமூக ஆதரவு, யோகா, தியானம், நவீன மறுவாழ்வு மையங்கள் ஆகியவை முக்கியப் பங்காற்றுகின்றன.
- குழந்தைகள் போதைப்பழக்கத்தால் பாதிக்கப்படுவதைத் தடுக்க, குடும்பத்திற்குள் வெளிப்படையான உரையாடல் கலாச்சாரத்தை வளர்க்க வேண்டும்.
- கல்வியாளர்கள் போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் ஆபத்துகள் குறித்த கலந்துரையாடல்களைப் பாடத்திட்டத்தில் இணைக்க வேண்டும்.
- போதைப்பழக்கத்திலிருந்து மீளும் இளைஞர்கள் பலவீனமானவர்கள் அல்ல; அவர்கள் உண்மையான போராளிகள்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடல்

# எதிர்கால தலைமுறையினருக்கு ஊக்கமளிக்கும் ஒரு மந்திரம்...

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பான திறனை வெளிப்படுத்திய இந்தியா, மொத்தம் 39 பதக்கங்களை (13 தங்கம், 9 வெண்கலம், 17 வெள்ளி) வென்றது. ஆகஸ்ட் 10 அன்று, பிரதமர் நரேந்திர மோடி காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுடன் கலந்துரையாடி, நாட்டிற்குப் பெருமை சேர்த்ததற்காக அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலின் போது, இந்திய விளையாட்டுத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், விளையாட்டு வீரர்களின் சாதனைகள், அடிப்படை அளவில் விளையாட்டுத் திறன்களை வளர்த்தல், நாட்டில் பரவலான விளையாட்டு கலாச்சாரத்தை உருவாக்குதல் ஆகியவை குறித்து பிரதமர் மோடி விரிவாகக் கலந்துரையாடினார்.



## விளையாட்டு வீரர்களை வரவேற்றல்

தேசிய அளவிலான விளையாட்டு வீரர்களைத் தனது அதிகாரப்பூர்வ இல்லத்தில் வரவேற்பது, பிரதமர் நரேந்திர மோடியின் சுமார் 12 ஆண்டுகால பதவிக்காலம் முழுவதும், ஒரு வழக்கமான, போற்றத்தக்க மரபாக இருந்து வருகிறது. விளையாட்டு வீரர்களுடன் உரையாடும்போது, நாட்டிற்காக வெற்றிகளை ஈட்டுவதில் இந்திய விளையாட்டு வீரர்கள் மேற்கொள்ளும் அர்ப்பணிப்புமிக்க முயற்சிகளும், தொடர்ந்து பெறும் வெற்றிகளும் பள்ளி மாணவர்களுக்கு மிகவும் சிறந்த ஊக்கமளிக்கும் சக்தியாகத் திகழ்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

## நாட்டின் துணிச்சல்மிக்க புதல்வர்களுக்கு மரியாதை

கார்கில் வெற்றி தினத்தன்று, பாகிஸ்தான் போட்டியாளர்களை 5–0 என்ற கணக்கில் வீழ்த்திய இந்திய ராணுவத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரரின் தேசபக்தியைப் பிரதமர் மோடி பாராட்டினார். அந்த வீரர் தனது வெற்றியை இந்திய ராணுவத்தின் வீரர்களுக்கு அர்ப்பணித்ததுடன், இத்தகைய இணையற்ற நாட்டின் பெருமிதம், விளையாட்டு வெற்றிகளுக்கு ஒரு சிறப்பான அம்சத்தைச் சேர்க்கிறது என்றும் கூறினார். மேலும், தனது ராணுவப் பயிற்சியாளர் நரேந்திர ராணா மற்றும் தங்களுக்கு இடையேயான 'நரேந்திர' என்ற பொதுவான பெயர் குறித்தும் ஒரு நகைச்சுவையான சம்பவத்தைப் பகிர்ந்துகொண்டு, அந்த விளையாட்டு வீரருடன் கலகலப்பான தருணத்தையும் அவர் கழித்தார். "நீங்கள் பதக்கங்களின் எண்ணிக்கையை அதிகரித்தது மட்டுமின்றி, ஒரு தலைமுறையையே தயார்படுத்தியுள்ளீர்கள்" என்று பிரதமர் மோடி கூறினார்.



## மீராபாய் சானுவின் கண்களில் கண்ணீர் திரண்டபோது...

பதக்க மேடையில் நின்று தேசிய கீதத்தைக் கேட்டவாறே ஆனந்தக் கண்ணீர் சிந்திய அந்த உணர்ச்சிப்பூர்வமான தருணத்தைப் பற்றி தங்கப்பதக்கம் வென்ற மீராபாய் சானு பகிர்ந்துகொண்டார்; காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின்போது அவரால் தன் கண்ணீரை அடக்க முடியவில்லை. அப்போது பிரதமர் மோடி அவரிடம், "நீங்கள் நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளீர்கள். உங்கள் கண்களிலிருந்து கண்ணீர் வழிவதைப் பார்த்தபோது, ஒவ்வொரு துளியிலிருந்தும் ஒரு தங்கப்பதக்கம் வழிவது போலவே தோன்றியது" என்று கூறினார்.

## விளையாடுபவர்கள் சிறப்பு அடைவார்கள்

விளையாட்டு வீரர்களுடனான உரையாடலின்போது, விளையாட்டுக்கான கட்டமைப்பு ஒருபுறம் இருந்தாலும், நாட்டில் விளையாட்டு கலாச்சாரம் உருவானால் மட்டுமே நமது வீரர்கள் பதக்கங்களை வெல்ல முடியும் என்று பிரதமர் மோடி கூறினார். நண்பர்களே, நீங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுள்ளீர்கள். நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளீர்கள். உங்களை நான் பாராட்டுகிறேன். என்னை நம்புங்கள், நீங்கள் தொடர்ந்து வெற்றி பெறுவீர்கள்; நாம் மீண்டும் இங்கே சந்திப்போம்.

## நீங்கள் மோடியைச் சந்தித்திருக்கிறீர்களா?

வீரர் ஒருவர் பேட்டியில் கூறினார், "நாங்கள் எங்கள் நண்பர்கள் வட்டத்தில் இதைப் பற்றி விவாதிக்கும்போது, நான் சொல்வேன், 'இது உங்கள் நன்மைக்காகத்தான்; நீங்கள் இதைச் செய்ய வேண்டும்.' பிறகு எனது நண்பர்கள் கேட்பார்கள், 'நீங்கள் மோடியைச் சந்தித்திருக்கிறீர்களா, நாங்கள் ஏன் உங்கள் பேச்சைக் கேட்க வேண்டும்?' அதற்கு அந்த வீரர் பதிலளித்தார், 'நான் இன்று உங்களைச் சந்தித்தேன், ஐயா.' இப்போது நான் அவர்களிடம் சொல்ல முடியும், 'ஆம், நான் மோடியைச் சந்தித்தேன்'.





2026-ம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற நமது சிறப்பான வெற்றியாளர்களை '7, லோக் கல்யாண் மார்க்' இல்லத்தில் வரவேற்பது மகிழ்ச்சியளித்தது. அப்போட்டிகளின் போது அவர்கள் பெற்ற அனுபவங்களை நான் கேட்டறிந்தேன். அவர்கள் அனைவரும் தங்கள் சிறப்பான செயல்பாடுகள் மூலம் நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளனர். அவர்களின் வெற்றி பல இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கும்.

**பிரதமர் நரேந்திர மோடி**

### பதக்கப் பட்டியல்



தங்கம் 13



வெள்ளி 17



வெண்கலம் 9

மொத்தம் 39

*காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுடன் பிரதமர் மோடி பிரதமர் மோடியின் முழு கலந்துரையாடல் நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.*

# இந்திய மக்களாட்சி மற்றும் சமூகத்தின் மரபு

## முன்னாள் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்தின் சுயசரிதை




*பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.*

***தாராள மனப்பான்மையும் இந்திய விழுமியங்களில் ஆழமான பிடிப்பும் கொண்ட ஒருவர், சமூகத்தில் குறைகளைக் காண்பதில் நேரத்தை வீணடிப்பதில்லை; மாறாக, அவர் சமூகத்தின் நேர்மறையான அம்சங்களில் கவனம் செலுத்துவதுடன், தங்கள் வெற்றியில் சமூகத்தை ஒரு சமமான கூட்டாளியாகவும் கருதுகிறார். முன்னாள் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் இத்தகைய மனப்பான்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். அதனால்தான், அவரது சுயசரிதை வெளியீட்டு விழாவின்போது, பிரதமர் நரேந்திர மோடி அந்த நூலை இந்திய ஜனநாயகத்திற்கும் சமூகத்திற்கும் ஒரு பெரும் கொடை என்று குறிப்பிட்டார்.***

ஒரு கோடைக்காலத்தில், முன்னாள் குடியரசுத்தலைவரின் வீட்டில் தீ விபத்து ஏற்பட்டது. அவரது தாயார், தனது பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்படாமல், வீட்டில் இருந்த பொருட்களைக் காப்பாற்ற முயன்றார்; அந்த முயற்சியின்போது அவர் தீயில் சிக்கி உயிரிழந்தார். இளம் வயதிலேயே தாயை இத்தகைய சூழலில் இழப்பது மிகுந்த வேதனைக்குரியதாக இருந்திருக்கும். இத்தகைய சம்பவம் எவரையும் நிலைகுலையச் செய்திருக்கக்கூடும் என்றாலும், இச்சூழ்நிலைகள் முன்னாள் குடியரசுத் தலைவரை மேலும் வலிமையடையச் செய்தன. அவரின் வீட்டுக்கு அருகே வசித்த ஒரு தாய் அவரை வளர்க்க உதவினார். இந்த அனுபவத்தின் மூலம், சமூக ஒற்றுமை, நல்லிணக்கத்தின் வலிமையை அவர் புரிந்துகொண்டார். ஒரு புத்தக வெளியீட்டு விழாவின்போது, பிரதமர் நரேந்திர மோடி முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் குறித்த இக்கதையைப் பகிர்ந்துகொண்டார். நாட்டின் புதிய தலைமுறையினர், முன்னாள் குடியரசுத் தலைவரின் எழுத்துகள், அனுபவங்களை அறிந்துகொள்ளும் வகையில், அவரது வாழ்க்கைப்பயணத்தை அவரது சொந்த வார்த்தைகளிலேயே வாசிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இப்புத்தகத்திற்கு "இந்தியக் குடியரசின் வெற்றி: எனது வாழ்க்கை, எனது போராட்டங்கள்" என்று மிகவும் பொருத்தமான தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் மோடி குறிப்பிட்டார். இதில் அமைந்துள்ள உணர்வு என்னவென்றால், அவர் வாழ்ந்த வாழ்க்கையும் சந்தித்த போராட்டங்களும் அவருக்கு மட்டுமே உரிய தனிப்பட்ட விஷயங்களாக இருந்தாலும், அந்தப் போராட்டங்களின் விளைவாகக் கிடைத்த வெற்றியானது இந்தியக் குடியரசுக்கே உரியதாகும். பிரதமர் மோடி மேலும் கூறியதாவது: "நான் கோவிந்த் அவர்களை நீண்ட காலமாக அறிவேன்; அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. குடியரசுத்தலைவராக அவரின் வழிகாட்டுதலும், என் மீதான அவரது அன்பும், கனிவும் எனக்குப் பெரும் சொத்தாக அமைந்தன. அவரது வாழ்க்கையைப் புரிந்துகொண்டு, அவரது திறன்களை உணர்ந்த நிலையில், ராம்நாத் கோவிந்த் அவர்களின் சுயசரிதை இந்திய ஜனநாயகத்திற்கும் சமூகத்திற்கும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சொத்தாகத் திகழும் என்று என்னால் முழு நம்பிக்கையுடன் கூற முடியும்."

பிரதமர் மோடி இளைய தலைமுறையினர் குறித்து பேசுகையில், இது 'ரீல்ஸ்' மற்றும் சமூக ஊடக செல்வாக்குள்ளவர்களின் காலம் என்றும், அவர்கள் மக்களைப் பல்வேறு திசைகளில் ஈர்க்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். குறுக்குவழிகள் நிறைந்த இந்தக் காலத்திலும், ஒரு முக்கியமான பாடத்தை நினைவில் கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்: ரயில் நிலையங்களில், "குறுக்குவழி உங்களைக் குறுகிய பாதையில் கொண்டு செல்லும்" என்று எச்சரிக்கும் நடைமேடைகளைப் பயன்படுத்தாமல், சிலர் வழக்கமாக தண்டவாளத்தில் குதிப்பதைப் போல இல்லாமல், இளைஞர்களும் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பாதையில் கவனமாக இருக்க வேண்டும். தாங்களுக்கு விருப்பமான ஆளுமைகளின் சுயசரிதைகளைப் படிக்குமாறு அவர் இளைஞர்களை ஊக்குவித்தார். ஏனெனில், அத்தகைய புத்தகங்கள் அந்தந்தக் காலகட்டங்களின் வரலாற்று நிகழ்வுகள் குறித்த ஒரு தனித்துவமான கண்ணோட்டத்தை வழங்குகின்றன என்று அவர் குறிப்பிட்டார். ●



**PMO India**
@PMOIndia

आज जब देश ने विकसित भारत का लक्ष्य तय किया है... तो इसके लिए आवश्यक है... देश का युवा, तन से स्वस्थ हो, मन स्वस्थ हो, आत्मविश्वास से भरपूर हो और ड्रग्स जैसी घातक आदत से हमेशा दूर हो: PM @narendramodi



**Rajnath Singh**
@rajnathsingh

भारत अब रक्षा उपकरणों का दुनिया के लिए निर्माता और निर्यातक बन रहा है। रक्षा उत्पादन और निर्यात में अभूतपूर्व वृद्धि, भारत की बढ़ती आत्मनिर्भरता, सामर्थ्य और वैश्विक पहचान का प्रमाण है।



**Amit Shah**
@AmitShah

सहकारिता के माध्यम से ग्रामीण अर्थव्यवस्था को मजबूत करने की दिशा में आज अलवर में ₹200 करोड़ की लागत से प्रतिदिन 3 लाख लीटर दूध के प्रसंस्करण की क्षमता से युक्त 'अलवर सरस डेयरी' के नवीन प्लांट का ई-शिलान्यास किया। साथ ही, ₹274 करोड़ की लागत से सरस डेयरी से सम्बंधित चार अन्य परियोजनाओं का ई-लोकार्पण भी किया।

आधुनिक तकनीक से युक्त इन संयंत्रों से उत्पादन प्रक्रिया अधिक वैज्ञानिक, पारदर्शी और कम ऊर्जा की खपत वाली बनेगी। इससे क्षेत्र के दुग्ध उत्पादकों को उनके दूध का बेहतर दाम मिलेगा, ग्रामीण क्षेत्रों में रोजगार के नए अवसर सृजित होंगे व प्रदेश में 'सहकार से समृद्धि' का संकल्प और मजबूत होगा।



**Nitin Gadkari**
@nitin_gadkari

📢 उत्तराखंड 🛣️

सीआरआईएफ के तहत उत्तराखंड में कुल 235.42 किलोमीटर लंबाई की 9 सड़कों के चौड़ीकरण और मज़बूती काम के लिए 297.37 करोड़ रुपए की लागत के साथ स्वीकृती दी गई है।

#PragatiKaHighway #GatiShakti



**Shivraj Singh Chouhan**
@ChouhanShivraj

आज लाल किले की प्राचीर से मैं देश के सामने शक्ति की सप्तधारा का आह्वान करता हूं।

1. Manufacturing Power
2. कृषि और Food Processing
3. Technology और Innovation
4. Gati Shakti
5. रक्षा शक्ति
6. Green और Blue Economy
7. भारत का Soft Power

- आदरणीय प्रधानमंत्री श्री @narendramodi जी



**Arjun Ram Meghwal**
@arjunrammeghwal

देश के नौजवानों के लिए बड़ी घोषणा!

- आने वाले एक वर्ष में 1 करोड़ युवाओं को AI स्किल्स की ट्रेनिंग

- युवाओं के उज्ज्वल भविष्य के लिए विभिन्न परीक्षाओं की निःशुल्क ऑनलाइन कोचिंग

#IndiaIndependenceDay

PUSHES FOR SELF-RELIANCE, ENERGY SECURITY, TECH PROWESS; BONANZA FOR YOUTH

# PM offers 7-step plan for Viksit Bharat

FE BUREAU
New Delhi, August 15

PRIME MINISTER NARENDRA Modi on Saturday unveiled a trove of promises for India's youth, offered more support for the unorganised sector and startups and reaffirmed the government's commitment to making India a developed country by 2047. Addressing the nation from Red Fort on the 80th Independence Day, Modi elaborated on his government's accomplishments, while promising faster economic reforms to strengthen the manufacturing sector, achieve scale and foster greater self-reliance on multiple fronts. He laid emphasis on energy security, especially in light of recent threats from external factors.

Acknowledging that coaching for competitive exams has become "a huge burden for middle-class families", he said the government will provide free online coaching for various examinations to the youth. "We have digital public infrastructure, highly talented teachers and educators. By bringing these resources together, we will provide free coaching to the country's young people and build an entire network for this purpose," he said.

He also announced a new scheme to train 10 million young people in artificial intelligence skills to equip them with the skills necessary to "lead in the world of AI".

Modi highlighted that semiconductors, AI, quantum technology, space, robotics and data centres would drive the economy in the future, adding that India should not become merely a market for new technologies but an 'innovation hub'. While three semiconductor manufacturing units are operational in the country, he said another 5-8 semiconductor plants are expected to be set up in the next 7-8 years.

Modi's 13th straight I-Day speech included a decisive response to the disaffection among the country's youth against the backdrop of ongoing protests over exam paper leaks, and the flashpoint in the national capital which led to the education minister's resignation. The PM mentioned the word 'youth' 21 times in his 75-minute speech and referred to the 'young' 23 times.

Continued on Page 2




PM Narendra Modi addresses the nation from Red Fort on 80th Independence Day on Saturday

## PM's PROMISES

- Five-eight more semiconductor plants
- **100 GW** nuclear power capacity by 2047
- Lakhpati Didi target to double to **60 million**
- AI training for **10 million** youth
- Free online coaching for competitive exams
- Talent hunt to identify promising sportspersons

## Sapta Dhara framework

- **Manufacturing:** Enable value chain for small components and large products, from design to manufacturing
- **Agri & food processing:** Farmer access to global markets aided by FTAs, with cuisine, millets, etc
- **Defence:** Emerge as global supplier of next-gen defence tech like drones, hypersonic tech
- **Tech & innovation:** Create hub for emerging tech such as AI, quantum tech, space
- **Green & blue economy:** Global scale in renewable energy, green hydrogen; fisheries, ocean tech
- **Gati Shakti:** High-speed inter-city connectivity via high speed rail; ports to be engines of growth
- **Soft power:** Tap yoga, ayurveda, handicrafts, culture, films, digital content, tourism

# Land, business reforms key to next phase of India's growth: Economists

KRITY AMBEY
New Delhi, 16 August

Resolving domestic policy bottlenecks and creating a more predictable investment environment through land reforms and an improved ease of doing business will be critical to Prime Minister Narendra Modi's push for next-generation reforms, economists said.

In his Independence Day address on Saturday, Modi identified '*Sapta Dhara*', or seven streams of strength — ranging from manufacturing, agriculture and infrastructure to soft power and global influence — that would drive the country's economic transformation. "We are going to move aggressively towards the next-level reform in the coming days," Modi said.

The *Sapta Dhara* spans near-, medium- and long-term reform priorities for India's Viksit Bharat vision for 2047, said Madras School of Economics Director and economist N R Bhanumurthy.

"The road ahead needs more micro reforms than macro reforms, and one such area is easing land acquisition by addressing the gap in land records," Bhanumurthy said. "That is the reason why a few states, particularly in the west and the south, are doing better in the manufacturing sector compared to those in the north and east," he added.

Land reforms assume greater significance amid the government's aim of increasing manufacturing's share of gross domestic product (GDP) to 25 per cent by 2035 from around 16-17 per cent currently.

"India would be better served by looking inward and addressing long-standing policy bottlenecks such as land acquisition and ease of doing business, especially amid external uncertainties," said Crisil Chief Economist DK Joshi.

The government has initiated work to address gaps in land reforms. Finance Minister Nirmala Sitharaman, in the FY25 Budget, announced fiscal support to states for three years for land-related reforms, including land administration, planning and management, urban planning, land usage and building bylaws. However, land reforms remain a state subject, and state governments would also need to ramp up their efforts.

"Once the domestic business environment becomes more predictable, a stable and predictable foreign direct investment (FDI) policy could help meet India's growing capital requirements," Joshi said.

A predictable FDI policy assumes greater significance in the context of India's termination of around 60 bilateral investment treaties (BITs) in 2016. Net FDI inflows into India have also slowed sharply over the past four years, falling from an annual average of around $40 billion between FY20 and FY22 to $7.65 billion in FY26, according to Reserve Bank of India data.

The government has initiated work towards a more predictable FDI policy and is likely to introduce an updated model BIT soon. Sitharaman had announced a review of India's model BIT in the FY26 Budget.

Having addressed structural gaps, the government also needs to continue streamlining existing reforms, economists said.

"While reforms were announced last year in the goods and services tax (GST), streamlining must continue there: the government is yet to bring petroleum products under GST," Joshi said. "The reform process should also focus on reducing compliance burdens and making implementation more uniform across states," he added.

On labour reforms, the government should wait and assess the impact of the four labour codes before embarking on another round of changes, Bhanumurthy said.



PM NARENDRA MODI IN HIS I-DAY SPEECH IDENTIFIED SEVEN STREAMS OF STRENGTH TO DRIVE INDIA'S NEXT ECONOMIC CHANGE



## President, PM, Top BJP Leaders Pay Tributes to Vajpayee on his Death Anniv

**NEW DELHI:** President Droupadi Murmu, Prime Minister Narendra Modi and senior BJP leaders paid tributes to former prime minister Atal Bihari Vajpayee on his death anniversary, emphasising his unparalleled role in India's progress. The leaders visited Vajpayee's memorial, 'Sadaiv Atal', located on the banks of the Yamuna in the national capital, to pay their floral tributes. Union home minister Amit Shah unveiled a statue of Vajpayee in the Chittorgarh district of Rajasthan. The Delhi government launched 25 new 'Atal Canteens' to provide hygienic, subsidised meals to low-income families. Vajpayee, the first BJP leader to become prime minister, was born on December 25, 1924, in Gwalior and died on August 16, 2018, in New Delhi. Modi described Vajpayee as an extraordinary statesman with remarkable vision who dedicated his life to serving the nation. "Remembering Atalji on his 'punya tithi'. An extraordinary statesman blessed with remarkable vision, he dedicated his life to the service of our nation," Modi said. He added that Vajpayee's words and efforts inspired generations and that his leadership significantly strengthened the country. "His focus on good governance and public welfare will always continue to guide us," he said. – PTI

PHOTO JUNCTION

# President calls youth valuable asset, bats for exam reforms

RAJESH KUMAR THAKUR @New Delhi

PRESIDENT Droupadi Murmu, in her address to the nation on Friday on the eve of the 80th Independence Day, reiterated the government's commitment to examination reforms. She said 65% of the country's total population is under 35. "This population is our most valuable asset. A team with an average age of just 28 years has successfully launched a rocket, beginning a new phase in space exploration."

Murmu said examination reforms had been undertaken as students are architects of India's future. "Collective efforts from all are necessary for students' present and future security," she asserted.

"Public examinations open the doors of opportunities for students," she said, adding that reforms aim to "completely curb the use of unfair means" and make exams "more transparent, secure and reliable for the youth."

The President said youth are talented, committed and skilled, citing innovative solutions by people at the grassroots level. Government initiatives are creating opportunities. "By gaining information about these opportunities, our people can choose new paths to success. Youth well-being forms the foundation of India's future." Families and society must ensure youth move forward with enthusiasm.

Murmu said the number of senior citizens is steadily rising. "Free healthcare facilities worth ₹5 lakh per year are available to approximately 6 crore senior citizens aged 70 years and above." Society must remain sensitive towards them and uphold self respect.

The President hailed the bravery of the armed forces, heritage development. "We take pride in the Indian tradition of triumphing over adversity."

Talking about the Indus Water Treaty, she said that suspending the treaty, originally signed with a nation that harbours terrorism, was a decisive step taken in the interest of the country and particularly for the welfare of farmers.

Speaking about the responsibilities of public representatives, she said, "Giving voice to the aspirations of the people is the duty of their representatives in the legislature. The Executive is responsible for implementing policies that serve the interest of the nation and its people. It is the duty of every person associated with the judicial system to ensure that no one is deprived of justice due to lack of resources".

Murmu also spoke about India's economic growth, saying the country is projected to grow at more than twice the average global growth rate despite global warfare and instability.

She hailed parts of the country becoming Naxal free, women's contribution to nation-building and India accounting for more than half of the world's real-time digital transactions. Stating that India is moving towards Viksit Bharat by 2047 with everyone's contribution, she said, "In today's India, each person can dream of big and can achieve it also."

On foreign policy, she said, "Our foreign policy is rooted in the national interest. Peace, cooperation, dialogue, and the ideal of Vasudhaiva Kutumbkam (the world is one family) are the pillars of our foreign policy." India has entered Free Trade Agreements with countries. "We are playing a leading role among the nations of the Global South and our stature on the global stage has risen."

The President said India believes in a rules-based international order and seeks representation in multilateral organisations, including the United Nations. "This effort of ours is receiving strong support from many countries," she asserted.



# “சாரநாத்தின் பழமையான புத்தத் தலம்”
# தற்போது யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தலம்

*தென் கொரியாவின் பூசன் நகரில் நடைபெற்ற உலக பாரம்பரியக் குழுவின் 48-வது கூட்டத்தில், 2025-26-ம் ஆண்டிற்கான யுனெஸ்கோ உலக பாரம்பரியப் பட்டியலில் இந்தியாவின் "சாரநாத் பண்டைய புத்தத் தலம்" சேர்க்கப்பட்டது. உலக பாரம்பரியத் தலங்களின் பட்டியலில் இடம்பெறும் இந்தியாவின் 45-வது தலம் இதுவாகும். இந்த உலகளாவிய கௌரவம், இந்தியாவின் பன்முக கலாச்சாரப் பாரம்பரிய மரபுகள், கட்டிடக்கலைச் சிறப்பு, பிராந்திய அடையாளம், வரலாற்றுத் தொடர்ச்சி ஆகியவற்றை பறைசாற்றுகிறது...*

- இந்தப் பட்டியலில் 45 இடங்களைக் கொண்டுள்ள இந்தியா, அதிக எண்ணிக்கையிலான உலகப் பாரம்பரியத் தலங்களைக் கொண்ட நாடுகளின் வரிசையில் உலகளவில் ஆறாவது இடத்தையும், ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது.

“

**ஒவ்வொரு இந்தியருக்கும் இது ஒரு பெருமைமிக்கத் தருணமாகும்! உத்தரப் பிரதேசத்தில் உள்ள சாரநாத், யுனெஸ்கோ உலக பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய அம்சமாகும். ஞானம், கருணை, நல்லிணக்கம் குறித்த காலத்தால் அழியாத செய்தியை உலகிற்கு வழங்கிய பகவான் புத்தருடன் சாரநாத் ஆழமான தொடர்பைக் கொண்டுள்ளது. இந்தக் கௌரவம் இந்தியாவின் ஆழமான கலாச்சார, ஆன்மீக பாரம்பரியத்தைக் கொண்டாடுகிறது. இது உலகம் முழுவதிலுமிருந்து அதிகமான மக்களை சாரநாத்திற்கு வருகை தரவும், பகவான் புத்தரின் கொள்கைகளுடன் இணையவும் ஊக்குவிக்கும்.**

பிரதமர் நரேந்திர மோடி




NEW INDIA SAMACHAR FORTNIGHTLY

RNI NO.: DELENG/2020/78811 SEPTEMBER 01-15, 2026
RNI Registered No DELENG/2020/78811 (Publishing Date: August 20, 2026 Pages:

EDITOR IN CHIEF
Dhirendra Ojha
Principal Director General
Press Information Bureau, New Delhi

PUBLISHER:
Kanchan Prasad
Director General, on behalf of
Central Bureau Of Communication

PUBLISHED FROM:
Room No-278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003